# வாழ்க்கைச்சோலை

# Vazhkaisolai

# ජීවිත උයන



கவிஞர் பூனாகலை நித்தியஜோதி

කවි නිත්‍යජෝති

Poet Nithiyajothy

# வாழ்க்கைச்சோலை
# நவீன நாவல்

பாகம்

01

கவிஞர் . பூனாகலை நித்தியஜோதி

வெளியீடு :

தமிழ் பட்டதாரிகள் ஒன்றியம்
பண்டாரவளை

வாழ்க்கைச் சோலை Vazhkaisolai

# நூல் விபரம்


| | |
|---|---|
| நூலின் பெயர் : | வாழ்க்கைச்சோலை |
| நூலின் வகை : | நாவல் |
| ஆக்கியோன் : | கவிஞர். பூனாகலை நித்தியஜோதி |
| வெளியீடு : | தமிழ் பட்டதாரிகள் ஒன்றியம் பண்டாரவளை |
| பதிப்பு : | அல்ஹாஜ். ஷிஹாப்தீன் "நுஸ்ரத்" |
| பதிப்புரிமை : | ஆசிரியருக்கே |
| முதற்பதிப்பு : | 2016 ஜுலை |
| அச்சகம் : | வடிவேல் இளையராஜா<br>இராஜ் கிரபிக்ஸ் - பண்டாரவளை |
| அட்டைப்படம் : | P. ஜெயகாந்தராஜ் (Dip.in.ACS)<br>(Esoft Instructor) |
| சர்வதேச பதிவு இல : | ISBN 978-955-43391-0-1 |
| பக்கங்கள் : | 102 |
| விலை : | 290/- |
| மின்னஞ்சல் : | nithinero9@gmail.com |

# சமர்ப்பணம்



பண்டாரவன்னியன் எனும் வரலாற்று நாடக நூலைப் படைத்து

புகழ்பெற்ற விரிவுரையாளர் முல்லைமணி சுப்பிரமணியம்

அவர்களின் தமிழ்ப்பணிக்காக இந்நூல் சமர்பணம்.

## வாழ்க்கைச்சோலை நவீன நாவல் வெளிவர உயரிய ஆலோசனை வழங்கிய இலக்கிய இரசிகர்கள்

- திரு. ஆ. கலையரசு அவர்கள் எம். ஏ
- திரு. தியாகலிங்கம் அவர்கள் முகாமையாளர் வீரகேசரி
- திருமதி.சுஜிதா பீ.எஸ் சீ அவர்கள் கலாசார உத்தியோகஸ்தர்
- திரு. மா. ஜோதிகுமார் அவர்கள் முகாமைத்துவ அதிகாரி
- திரு. இளையராஜா அவர்கள் (இராஜ் கிரபிக்ஸ்)
- திரு. ஜெயகாந்தராஜ் அவர்கள் (கணனி ஆசிரியர்)
- திரு. பரமநாதன் அவர்கள் (ஆங்கில ஆசிரியர்)

மற்றும் கணனி அச்சுப்பதிவுக்கு உதவிய திருமதி. நந்தினி, திருமதி. தர்ஷினி, செல்வி. பிரமிளா, செல்வி. பிரியா பாக்கியநாதன், செல்வி. பிரியங்கா தேவேந்திரன்

# வாழ்த்துச் செய்தி

"நூல்களே ஒரு சமூகத்தின் அளவு கோல்"

ஊவா மாகாணத்தின் பண்டாரவளையிலிருந்து வெளியிடப்படும் ஒரு நாவலுக்கு வாழ்த்து வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூலை எழுதிய கவிஞர் பூனாகலை நித்தியஜோதி அவர்களை உங்களோடு சேர்ந்து நானும் வாழ்த்துகிறேன்.

வாசிக்கும் எல்லோருக்கும் பிடித்தமான புத்தகங்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எழுதப்படுவதில்லை. இந்நாவல் நம் அனைவருக்கும் பிடித்தமான நூலாகவும், உளக்கிளர்ச்சியை ஏற்படுத்தும் படைப்பாகவும் அமையும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. கவிஞர் அவர்கள் மேலும் பல படைப்புகளால் மலையக இலக்கியம் வளர்ச்சிக்கு சேவையாற்ற இறைவனை இறைஞ்சுகிறேன்.

**திருமதி. சுஜிதா இராமராஜ் (பீ.எஸ் சீ)**
**இந்து கலாசார உத்தியோகஸ்தர் - பண்டாரவளை**

✱ ✱ ✱

# முன்னுரை

இலக்கியப்பணியானது மிகவும் கடினமான பாதை வழிப் பயணமாகும். அதனை ஊவா மண்ணில் சிலர் வாழ்க்கை எனும் பயணத்தின் ஒரு வழிச்சாலையாக தெரிந்து கொண்டுள்ளனர். ஒரு தேசிய இனத்தின் வளர்ச்சி எனப்படுவது யாது? அது சீமெந்து கட்டிடங்களால் ஆன கூட்டுச்சுவர்களா?

யாழ் மாவட்டம் வளர்ந்துள்ளது. அவர்களிடம் காட்ட ஆயிரக்கணக்கான நூல்கள் உள்ளன! கிழக்கு மாகாணத்திலும் குறிப்பிடுவது போல 'யாழ்நூல்' போன்ற ஆய்வு நூல்கள் உள்ளன. மிகக்குறைந்த இலக்கியச்சாரலில் நனைந்துள்ள ஒரு மண்ணிலிருந்து 'நவீன நாவல்' ஒன்றினை எழுதியுள்ள எனது முயற்சிக்கு நாடுதழுவிய ஆதரவு கிடைக்க வேண்டுமென விரும்புகின்றேன். பிரதேசவாதம், இனவாதம், மதவாதம் கடந்து சமாதானமெனும் கருப்பொருளை மையப்படுத்தி எழுதப்பட்ட இந்நாவல் வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா என நான்கு மாநில மக்களையும் இனக்குரோதம், மொழிவெறி என்ற பேதங்களுக்கு அப்பால் சென்று ஒரு அமைதி சோலைக்குள் அழைத்துச் செல்ல விளையும் கருவூலத்தை கொண்டுள்ளது.

'அன்பின் உறவால்' அடுத்தவனின் திறமை! ஆற்றல்கள் மெச்சப்பட்டு அங்கிகரிக்கப்படும் நாளிலேயே சமாதானச் சிறகு விரியும். மனக்குரோதம், காலைவாருதல், திறமை மறுப்பு, கட்டாயத் திணிப்பு போன்றவையே இந்நாட்டை முப்பது வருட செங்குருதி கொண்டு கழுவிய நாட்கள் எனலாம்.

இலங்கை தமிழ் நாவல் அனிச்சமலரின் காதல், மலையக நாவல் கண்ணனின் காதலி, ஊவாவின் நாவல் தூரத்துப்பச்சை என பெறுமதிமிக்க படைப்புகளுடன் 'வாழ்க்கைச்சோலை நாவலும் சேர்த்து பேசப்படும் நாளில் எனது இலக்கியப் பணியின் பயணபாதையில் மைல்கல் ஒன்றினை கடந்துவிட்ட திருப்தி எனக்குள் பிரவாகின்றது.

'நவீன நாவல்' என்ற பாணியில் எழுதப்பட்ட இந்நூல் புதிய வாசகரிடையே ஆர்வத்தைத் தூண்டும் காதல் கதையாக எழுதப்பட்டுள்ளது. தொண்டமானாறு, செங்கலடி, எல்லை, அப்புத்தளை, பூனாகலை என வடக்கு, கிழக்கு, ஊவா என பல பிரதேசங்களைக் கடந்து, பிரதேச இணை கரத்தை விரல்களில் கோர்த்துச் செல்லும் இளைய மனங்களின் அணிவகுப்பு மரியாதையாகும்.

ஒரு மையப்புள்ளியின் இலக்கியவாதிகளிடம் சிக்கிக் கொள்ளாமலும், சுதந்திரமாக சிறகடித்துள்ள கதாபாத்திரங்கள் இடையே "மனிதம்" என்ற விதையை விருட்சமாக்கிட முரசு கொட்டியுள்ளேன். பதுளை சிறுகதை, மலையக நாவல் என்ற ஆய்வுகளை எழுதியுள்ள என்னால் உறவுநிலை ஒட்டு ரோஜாவை பூக்க வைக்க முடியுமென்ற நிலைப்பாட்டில் விளைந்ததுவே 'வாழ்க்கைச்சோலை" எனும் நாவலாகும்.

நிறைந்த கல்வி அறிவு, பண்பாடு தழுவிய வாழ்க்கைப் பாதையில் நடந்து செல்லும் இலக்கியவாதிக்கு வானத்தில் இருந்து இறைவன் ஆசி கிடைத்துக்கொண்டு இருக்கிறது. சிங்கள திருநாளை ஆரம்பித்த சிங்கள குடும்பங்கள் மதிப்பு எங்கள் பெற்றோரிடம் காட்டிய மதிப்பு அவர்களின் நேர்கோட்டு வழிநடத்தல் எங்களை அறிவுப்பாதைக்கு இட்டுச்சென்ற தர்மமாகவும் அமைந்தது.

மக்கள் இலக்கியமானது புழுதிப்பாதையில் செல்லும் வண்டிற் பயணம் போன்றது. அதில் விளிம்புநிலை மாந்தரின் ஏக்கப் பெருமூச்சுகள் காணப்படும். சுரண்டல்கள் கலையவும், விடிவுகள் பிறக்கவும் எழுத்தாளன் மனவோட்டத்தின் மூலம் வாசகனை தீர்வு நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும் என்ற கோட்பாட்டினையும் நான் அறிவேன். நிகழ்காலத்தில் கைநழுவிப் போயுள்ள இன உறவை மேம்படுத்த ஏதாவது இலக்கியவழி முயற்சிகள் நடைபெற வேண்டும் என்ற மன உந்துதலேதான் இந்நாவலைப் படைக்க காரணமாக அமைந்தது. இளையோர்கள் விரும்பும் மொழிநடையிலும்

அவர்கள் சந்திக்கும் வசந்தகால நினைவுகளை நாவலில் விளாம்பரமாகத் தந்துள்ளேன். எனது இந்நாவல் வெளிவர உதவிக்கரம் நீட்டிய இலக்கிய அன்பர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கவிஞர் பூனாகலை நித்தியஜோதி**

இல. 07, புதிய வீடமைப்புத்திட்டம்
கிரேக், பண்டாரவளை

❊ ❊ ❊

# அணிந்துரை

பாட்டுக்கொரு புலவன் பாஞ்சாலி சபதத்தின் முகவுரையில் "சுவைபுதிது, பொருள்புதிது, வளம் புதிது, சொற்புதிது சோதிமிக்கக் நவ கவிதை" என்றும்.....

"எளிய பதங்கள், எளியநடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள். பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்கு புத்துயிர் தருவோனாகிறான்."

மேற்போந்த பாரதியின், கூற்று நவீன இலக்கியத்திற்கு இருக்க வேண்டிய யதார்த்த பண்புகளை தெளிவாக படம் பிடித்துக்காட்டுகின்றது.

இவ்வகையில் நீண்டகால இடைவெளிக்குப்பிறகு, ஊவா மாகாணத்திலிருந்து வெளிவரும் கவிஞர் நித்தியஜோதியின் "வாழ்க்கைச்சோலை" எனும் படைப்பிலக்கியத்தில் பாரதி காட்டிய வழி நின்று பொருளிலும், சுவையிலும், வளத்திலும் புதியதோர் முற்போக்குச் சிந்தனை ஊடுருவ இலக்கியச்சோலையை களமாக்கியுள்ளார் எனலாம்.

வாழ்க்கைச்சோலை எனும் படைப்பிலக்கியம் "கணினி" மையத்திலிருந்து உருவாகியது. உண்மையில் இவ்விலக்கியத்தின் கருப்பொருளே "அறிவியல்தான்" கணினியை கருவாகக்கொண்டு கதாபாத்திரங்களுடாக சமூகத்தின், நாட்டின், பிரச்சனைகளுக்கு விடிவுகான முயல்வதுடன், அதற்கான களத்தையும் ஏற்படுத்தியுள்ளார் எனலாம்.

இதனையே வள்ளுவர்....
"மெய்பொருள் காண்பது அரிது" என்றும் பாரதி சுவை புதிது, பொருள் புதிது, என்றும் கூறியுள்ளார்கள். அறிவியலோடு சார்ந்த கணினி மையமும் தகவல் தொடர்பாடலும் வாழ்க்கைச்சோலையில் வரும் கதாபாத்திரங்களான திஷான், சித்தாரா, பிரியங்கா, வாசு, துலாஞ்சனி வாயிலாக புதிய பாணியில் புதிய சுவையில், அறிவியல் இலக்கியத்திற்கு புதியதோர் இரத்தத்தை பாய்ச்சுகின்றனர்.

பெருந்தோட்டத்தின் மரபுகள், வழக்காறுகள் கலாசாரம் அடியோடு சிதைந்து, அதன் கட்டமைப்பை இழந்து எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில் வாழ்க்கைச்சோலையில் செவ்வந்தி இதழில் பின்வருமாறு குறிப்பிடுவது நோக்கற்பாலது.

“சுமார் ஆயிரம் வாக்காளர்களை கிராம சேவையாளர் 155 வசமாக முன்னேற்றம் கண்ட ஒரு பெரிய தோட்ட நவீன குடியிருப்புக் கிராமமாகும்.” இதன் மூலம் எதிர்காலத்தில் இருநூறு வருடங்களாக பேசப்பட்ட பெருந்தோட்டம் என்ற வார்த்தை விடுதலை பெற அதிக காலம் இல்லை என்பதை எமக்கு அறியத் தருவது குறிப்பிடப்பாலது.

உண்மையான மீனவனுக்கு கரைகள் சொந்தமாகும்போது பனைமரத்தில் ஏறும் ஈழவனுக்கு பனை சொந்தமாகும்போது, தேயிலை மாந்தருக்கு தேயிலையே சொந்தம் என்ற அறிவியல் கருத்தும் தேயிலைத் தோட்டங்களின் இன்றைய நிலையை படம்பிடித்துக் காட்டுகின்றது.

ஓஹிய தோட்டத்தை அடைந்தபோது மூடி சீரழிந்த தேயிலை தொழிற்சாலை, தலையில் கல்லை சமக்கும் தகர லயன்கள், மண்சரிவில் சிக்கிய குடியிருப்புகள், ஓராயிரம் தொழிலாளியை புதைத்து நின்ற தோட்ட மயானம், இந்த மரச்சோலை இன்னும் எத்தனை உயிர்களை காவுகொள்ளும் என்ற யதார்த்த பார்வையும்

“சுவர் வெடிப்புகள், வீடுகள் தரைக்குள் புதையும் அவலம்.”

இதனைப்பார்த்து கடவுள் தண்டனை எனக் குமுறும் சுரண்டப்பட்ட வர்க்கம். இவர்களுக்கு சரியாக வழிகாட்டுபவர்கள் யார்? என்ற கேள்வியும். தொடர்ந்து கிரிகெட் மைதானத்தில் சீமாட்டிப்பெண்கள் பீர் குடிப்பார்கள். அவர்களே வந்து மலையில் தொழிலாளர் குடிப்பதாக புள்ளிவிபரம் வெளியிடுவர் என்ற முதலாளித்துவத்தின் ஈனச்செயலையும் காட்டியுள்ளார்.

மலையகம் முன்னேற வேண்டுமென கோபப்படுபவர்கள் பாடுபடுபவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் விளக்குகிறார். எல்லா காலங்களிலும் எல்லா நாடுகளிலும் சிந்தனைப்புரட்சி வளர்த்துக்கொண்டே இருக்கின்றன. புல புரட்சிகள் நசுக்கப்படுகின்றன. சிலப்புரட்சிகள் உலகில் பேசப்படுகின்றன. தேயிலைப்புரட்சி ஒரு நாள் ஏதோ ஒரு எல்லையில் பேசப்படும் என்பது நிதர்சனமாகும் என்ற நாவலாசிரியரின் கூற்று நோக்கற்பாலது.

ஊவாவின் புதிய நாவலொன்றை கையில் எடுத்து மகிழும் இந்நன்நாளில் கல்விகற்ற அனைத்துத் தரப்பினரும் இந்நாவலை வாங்கி வாசித்துப் பயனடைய வேண்டுகின்றேன்.

**திரு. பி.வேதாந்தமூர்த்தி,**
முன்னாள் மாகாண உதவிக்கல்விப்
பணிப்பாளர

பணிப்பாளர்,
அமரர். சந்திரிக்கா ஞாபகார்த்த
புலமைப்பரிசில் நிதியம்,
பதுளை.

❊ ❊ ❊

# பதிப்புரை

"பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்"

இன்ஷா அல்லாஹ் பூனாகலை நித்தியஜோதியின் வாழ்க்கைச்சோலை நாவலுக்கு பதிப்புரை எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மிக நீண்ட காலமாக கல்விப்புலத்திலும், சகல இன மக்களோடும், சேவையாற்றியுள்ள கவிஞரின் நாவல் ஊவா மக்களின் சமாதானத்தை பிரதிபலிக்கும் வண்ணம் படைக்கப்பட்டுள்ளது.

இன்று நாடு வேண்டிக்கொண்டிருக்கும் இன ஒற்றுமையை மேம்படுத்தும் முகமாக அமைந்துள்ளமை வாழ்க்கைச்சோலை நாவலின் சிறப்பம்சமாகும்.

நூலில் ஊவா, யாழ்பாணம், மட்டகளப்பு, அநுராதபுரம் என பல பிரதேசங்களையும் உள்வாங்கி உறவு நிலையில் எழுதப்பட்டுள்ள இந்நாவல் பிரதேசவாதத்தை முறியடிக்கும் முயற்சிக்கு வித்திட்டுள்ளது எனலாம்.

கவிஞரையும், இந்நூல் வெளிவர இரவு பகலாக உழைத்த நல் மனங்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அல்ஹாஜ் பி. ஏ. ஷிஹாப்தீன் பீ. ஏ**
பதிப்பாசிரியர்

நஸ்ரத்,
கெப்பெடிபொல வீதி,
பதுளை

# 1. செவ்வந்தி

**தென்றல் குளிரவில்லை**
**தெங்மாங்கு இனிக்கவில்லை**
**திங்கள் திசைக் கூட**
**தெளிவாகத் தெரியவில்லை**
**அந்தப்பேச்சு.........**
**அந்தவிழி.........**
**அந்தநடை......அந்தஅழகுமட்டுமே!**
**வெளிச்சம் காணாதவிழிகள் !**

பிபிலை ஜெயபாலன்

பிரதான வீதியில் பேருந்து நிறுத்தம், அருகிலே வழிப்பிள்ளையார் விழி திறந்து வியாசகம் எழுதும் தோற்றம் அருகே இராஜகோபுரத்துடன் நீதி பேசும் அம்மன் ஆலயம். அவற்றைக் கடந்து அரவிந்தர் விஞ்ஞானக் கல்லூரியின் கணித ஆய்வுகூடத்திற்கு எதிரே வளைந்து செல்லும் முதலாம் குறுக்குத்தெருவில் நடந்து சென்ற சித்தாரா, பச்சை இலைகளின் நடுவே சிரிக்கும் ரோஜா, வரைந்த பூக்குடை கொண்டு தன் முகம் மறைத்து துள்ளி நடந்தாள். அவள் நடைக்கு கால்கொலுசு சங்கீதம் பாடி அரங்கம் கண்டது.

சுமார் ஆயிரம் வாக்காளர்களை கிராமசேவையாளர் 155 வசமாக அமைந்த முன்னேற்றம் கண்ட ஒரு பெரிய தோட்ட நவீன குடியிருப்புக் கிராமம். அங்கே புதிதாக காதல் பாட்டுப் பாடும் மங்கம்மா தேநீரகம், திறந்த லொறியில் விரிக்கப்பட்ட பாயில் மரக்கறி வகைகளை ஏந்தி நிற்கும் பிளாஸ்ரிக்கூடைகள். சற்று தள்ளியே “தொண்டா” கராஜ், மேல்வீதியில் வருத்தப்படாத சங்கம் அரச அனுமதியில் இயங்கிவருகின்றது.

விமலநாதனின் நாட்டுப்புறப் பாடலுடன் சிற்றுண்டி வண்டி ஒன்று ஓடியோடி வியாபாரம் பார்த்தது. டே கெயார் சென்ரரெனும் காப்பகம் குழந்தைகள் தினமும் வாடகை பெற்று பாதுகாக்கப்படும் நிலையம், சுக பரிசோதனை நிலைய தனியார் போர்ட்டுடன் ஊசிபோடும் கௌசிக் கண்ணா (M.B.B.S) "கனவு காணுங்கள்" என்று அப்துல்கலாம் சொன்னதை தோட்டங்களும் இரண்டாயிரத்தின் ஆரம்பத்தில் ஆயுதமாக தூக்கிப் பார்த்துள்ளன. அதனால் நனவுகள் பூத்துக்கொண்டன.

சித்தாரா தனது லெகினிலிருந்து டச் போனை எடுத்தாள், குறுந்தகவல் வந்தது! எட்டிப்பார்த்தாள். த்ரீவீலர் மட்டுமிருந்தது! அவனைக் காணவில்லை! வீம்பைப்பாரு! தன்னைத்தானே நொந்து கொண்டு செவ்வந்தி தோட்டத்துக்குள் அமைந்துள்ள வீட்டுக்கு வந்தாள் "சித்தாராபவனம்" மாடி வீட்டு வாசலில் முகவரி பளிச்சிட்டது! வீட்டு முற்றத்தில் ஏற்றுமதிக்காக ஆரேழு செவ்வந்தி மலர்க்கூடைகள் கொரியர் வழியனுப்ப காத்துக்கிடந்தன.

தனது அந்தப்புரம் நுழையும் போதே குளிர்சாதனப்பெட்டியிலிருந்து தோடச்சுவையை ரசித்துக் கொண்டு கண்ணாடி முன் நிற்கும்போது காதின் அருகே சுருண்டு விழுந்த கூந்தலருகே ஒரு முகப்பரு! அதனைத் தொட்டுப்பார்த்தாள்! ஏன்? எப்படி? உதடு கடித்து தன் விம்பத்தை கண்ணாடியில் பார்த்து கண்ணடித்தாள்! ச்சீ போடி ! என தனக்குத்தானே தோழியாகி கேலி சொன்னாள்.

நேற்று இல்லாத மாற்றம் என்ன? தனது கழுத்தில் கிடந்த சோலைக் கொண்டு நெஞ்சை மூடினாள்! அவள், அவனை மனசுக்குள் வைத்திருப்பதை யாரும் கண்டுவிடக்கூடாதே! மனம் திக்.. திக்.. என்றது.

திருமண மலர்களே சொல்லுங்கள்! அவன் யார்? தென்றல் வந்து உங்களிடம் சொல்லவில்லை! சித்தாராவிடம் கேட்டாள் கண்ணாமூச்சி விளையாடுவதுபோல கண்ணை கட்டி விடுவாள். அவள் உயிர்த்தோழிக்குக் கூட தெரியாத அந்த நபர் அவள் இதயம் அடிக்கடி சொல்லும் இரண்டு எழுத்தைக் கொண்டவரா?



# 2. தாமரை

**அன்பறம் அழகுமிக்கவள்- கவி**
**ஆன்றபுலமையில் வளர்ந்தவள்**
**இன்கனிச் சொற்களின் பாமணம் என்னும்**
**இலங்குகுமரியாய் இருப்பவள்.**

கவிஞர் எல்லை துரைச்சாமி
(நாளெந்தநாளோ)

ஆயிரம் தாமரை மலர்களை அடுக்கி வைத்து பூசைத்தட்டுகளை தயார் செய்திருந்தாள் "சோமாவதி". ஒரு குடிசை வீட்டில் பிறந்த தலித் பெண்ணாக இருந்தாலும், குடியானவர் போல விவசாயம் செய்யவும், செட்டியார்போல கடை நடாத்தவும் அவள் பழகி இருந்தாள். ஒரு நாய் எல்லா உணவிலும் வாய் வைப்பதுபோல் எல்லா தொழிலையும் செய்யாமல், அவளது தோவ கிராமததுப் பெண்களை பிரிந்து நின்று வியாபாரம் செய்யச் சொன்னவள். வலகம்பா மன்னன் அமைத்த குகைக்கோவில் வாசலில் மலர்ச்செடி விற்கவும், தாமரைப்பூ தட்டுகளை கொடுப்பதிலும் அவள் ஈடுபட்டு வந்தாள். புத்தர் கோவிலுக்கு வருபவர்கள் மலர்த்தட்டு வாங்குவார்கள். அது அவள் வாழ ஆதாரமாகவிருக்கும்.

பிரியங்காவுடன் புத்தர் கோவில் சென்ற "சித்தாரா" பூசை தட்டுடன் ஆலயம் நுழைந்தாள். சிறிய குகைக்கோயில், மிக அமைதி! தூய வெள்ளை ஆடையில் ஆண்களும், பெண்களும் கீழே அமர்ந்து நெற்றியிலே கை வைத்து தலை குனிந்து வணங்கினார்கள்.

நீட்டி படுத்திருந்த புத்தர் சிலையின் அறிதுயில் யோகநிலை! சுற்றிலும் கல்பிந்து, நீரலை போன்ற ஓவியக்காட்சிகள் மெய்மறக்கச் செய்தன. சற்று நேரம் சித்தாரா, பிரியங்கா இருவரும் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். அதன்பின் கிஷானுடன் சேர்ந்து வெளிவாசல் வந்தனர். மர நிழலின் குளிர் ஒரு புறம், பௌத்த பள்ளி ஒரு புறம், குகைக்கோவில், எதிரே ஓடும் குளிர்ந்த "துளிநதி" ஆஹா! அங்கே அப்போதே மன அழுக்குகள் கழுவி விடுப்பட்ட உணர்வு, மூளை நுண்மதி அறிவை சேமிக்க, புத்துணர்வு கொண்டு சுழலும் நிலை, அன்பும், பாசமும் பொங்கி வரும் சூழல் அவர்களை அரவணைத்தது.

அவர்கள் வெள்ளிக்கைப்பிடி கொண்ட படிகளில் ஏறி கோயில் நுழைவாயிலை அடைந்தனர். இரண்டு வேன், ஒரு பஸ், சில த்ரிவீலர்கள் என வாகன வரிசைகள். ஆரவாரமான சிரிப்பும், கும்மாளமும் அங்கு இல்லை. பக்த்தர்களின் தொண்டை கிழியும் வேண்டுதல்களுமில்லை. மாலை, மரியாதை எதிர்பார்க்கும் சங்கத்தலைவர்களும் இல்லை. "ஐயர்" எனப்படும் உயர் குலமும், தலித் என்னும் சிறு குலமும் அங்கே காணப்படவில்லை.

நல்ல குடும்பத்தலைவன், புனிதமான தாய்மை, பாச சிறகுகளுக்குள் கட்டுண்ட சேய்கள், இளைஞனின் துடிப்பு அங்கில்லை. யுவதியின் கேலிகள் அங்கில்லை. சிறுவர்களின் ஓட்டம் தொலைந்திருந்தது. அப்படி ஒரு குடும்பம் வெளியரும்பிய பாறை ஒன்றில் அமர்ந்து அவர்களை எதிர்பார்த்தது.

திஷான் சிணுங்களாகச்சொன்னான் துலாஞ்சனி குடும்பம் என சித்தாரா, பிரியங்கா இருவரும் அவர்களைக்கண்டதும் நெருங்கிச்சென்றனர். அவர்கள் இருவரும் அப்பாவினதும், அம்மாவினதும் பாதம் பணிந்து எழுந்தனர்.

திஷான் பாறையின் ஓரத்தில் அமர்ந்தான். அவனுக்குத்துணையாக வந்த "வாசு" தோளை தொட்டப்படி நின்றான்.

திஷானின் முகநூலில் பேசும் பெண். ஒரு நாள் என்னை விரும்பும் பெண் யார்? என இவன் கேட்க நூற்றுப்பத்து பெண்கள் புகைப்படத்துடன் வந்தார்கள். அவர்களில் முதலில் ஸ்கைப் வழி வந்து சிரித்துப்பேசியவள் இந்த அநுராதபுரத்தின் பைங்கிளி. ஒரு வேளை அனுமன் சீதையைத்தேடி வந்து காணக் கிடைத்திருக்காவிட்டால் இவளைத்தான் ஜானகி என நினைத்திருப்பான். அனுமன் கோவில் அமைந்த நகரமே அனுமநாதபுரம். அதுவே பிற்காலத்தில் மருவி வழங்கப்படலாயிற்று.

திஷானுக்குச் சொந்தமாக அப்புத்தளை நகரில் ஒரு கணினி நிலையம் உள்ளது. சித்தாரா, பிரியங்கா இருவரும் அவனிடம் அச்சுப்பதிவு கலை நிபுணர்களாக உள்ளனர். பேஸ்புக், டுவிடர், வைபர், ஸ்கைப். டியூட்டர் கொரியர், டிஜிட்டல், வெப்தளம் என்கின்ற எந்திர வீரர்கள் அவர்களின் கையாட்கள்.

"பிரியங்கா, துலாஞ்சனி நாளை தோவைக்கு வருகிறாள். என்னையும் வந்து சந்திக்கச் சொல்கிறாள்.

"சரி... போங்க.."!

"இல்ல.. எங்க தங்கச்சி ரெண்டு பேருடன் வருறதா சொல்லியிருக்கேன். நீங்களும்.. சித்தாராவும்..."!

மறுவார்த்தை இல்லாமல் "சரி" என்றனர். அப்படி ஒரு பொறுப்பு, ஒரு கனிவு, திறமை உள்ள இருபத்து நான்கு வயது இளைஞனை அண்ணா என எந்த வயதுப் பெண்களும் சொல்லிக்கொள்வதில் பெருமை கொள்வார்கள்.

"புத்தா.. நங்கிலா தென்னெக்த" ? அவனது அன்ரீ கேட்டப்போது "நோ.. வீ யா த்ரீ போய்ஸ்", "தெயார் மை அங்கிள்ஸ் டோட்டர்ஸ்" என்றான்.

அவனது சரளமான ஆங்கில அறிவு உரையாடல் அவளைக் கவர்ந்தது. ஐ ஏம் ஏ இங்கிலீஸ் ரீச்சர்

"தூலா ஹேஸ் பீன் சென்ற் ஏ ப்பெமிலி போட்டோ அன்ட் ரிட்டர்ன் எப.்.வ்ட் யூ அங்கிள் ஸ் ஏ வளவ் ஓவுனர்"

ஓ! ஐ ஹேவ் ஒன்லி டு கேர்ள்ஸ் எல்டர் ஸ் எற் ருஷ்யன் யுனிவர் சிட்டி.

“மை பேரன்ஸ் ஆர் பிலான்டேஷன் வேர்க்கஸ்”
உழைக்கும் வர்க்கம் என அடையாளம் தெளிவாகக்கூறும்போது.
மாமாவும் அருகில் வந்து
“புத்தா நங்கிலாதென்னம அப்பே பத்த என்ட” என அழைப்பு விடுத்தார்.

சற்று நேரம் மாமாவும், மாமியும் பதுளை வீதிக்கு வந்து மலர் தொட்டில்களையும், மலர்ச் செண்டுகளையும் வாங்கினார்கள். இளசுகள் மனம்விட்டு சற்றுப்பேச ஒரு இடைவேளை கிடைத்தது. சுதந்திரம் என்பது காதலுக்கு தேவை. அதனை வழங்காதபோது அவர்களே எடுத்துக்கொள்வார்கள்.

திஷானும், துலாஞ்சனியும் பாறையில் அமர்ந்து செல்ஃபி எடுத்தார்கள். அவள் அருகில் சென்று முகம் பார்த்து சிரித்தான். வறுமை என்பதை காணாத கண்கள். துன்பத்தைக் கேட்காத காதுகள்! தோல்வியை சந்திக்காத மனது! இவற்றின் சொந்தக்காரி துலாஞ்சனி. இது சித்தாராவின் சிறு மூளை எழுதிய வரிகள். அவள் முகத்தைப் பார்த்தாள் மூக்கில் சிறிதாக மூக்குத்தி மின்னியது. ஹிந்தி நடிகை மாதிரி.

“நா தமிழ் பொண்ணு மாதிரி இருக்கிறதா?”

“ஓ! அப்பபடியே அபிநயா மாதிரி”!

“யாரு! அபி?”

“அவ தமிழ் ரெலி எக்ரர், கிஷானோட ஸ்கூல் மெட்”

“ஓ! அவ மாதிரி மங் தேங்யூ !!

திஷானின் காலை அவள் மடியில் வைத்து பாதத்தில் ஒட்டி இருந்த சிறு மணலை கைகளால் துடைத்தாள். கால் உறைகளை போட்டுப்பாதணி அணிந்து நாடாவை இறுக்கிக்கட்டினாள்.

“ஏய்! எனக்கே பொறாமை வருதுடி”! பிரியங்கா சித்தாரா காதில் ஓதினாள்.நான்கு பேரும ஒன்றாக நின்றபோது “வாசு” ஓடி வந்து டிஜிட்டலில் ஓடவிட்டான். பிரியங்கா தனது கால்கொலுசைக் கழற்றி துலாவின் கால்களில் அணிந்தபோது நான்கு டச் போன்கள் காட்சியை கோலப்படுத்தின.

“துவ எண்ட” என தாய் அழைத்ததும் ஓடி சென்று வேன் கதவை ஓங்கி அறைந்தான். பிரிவைதாங்காமல் ஆசனத்தில் படுத்து அழுவான் என சித்தாரா நினைத்தாள். அவர்கள் த்ரீ வீலில் ஏறியபோது கண்கள் சிவந்து, முகம் வாடி, தள்ளாடி அமர்ந்திருந்தான் திஷான்.

ஒரு விடியற்காலை கனவு கலைந்து போனது போல உணர்ந்தான்.

சேர்! அந்த பொண்ணு வாசு போனைக் கொடுத்தான்!
டேய்! அழுதிடுவேன் மாதிரி இருக்குடா! சித்தாரா நீயே பேசு.....
சித்தாரா போனை வாங்கி கைரேகையை தடவும் முன் அதிர்ந்தாள்.
அந்த போன் டிஸ்பிளேயில் சித்தாராவின் முகம்.

“எனக்கும் கஸ்டமா இருக்கு பிரியங்கா நீ பேசு!

போனை கைமாற்றி விட்டு வாசுவைப் பார்த்தாள்!

எதுவுமே நடக்காதது போல ஊர்தியை வேகமாக்கினான். என்ன இதுவெனக் கேட்டால் நான் என்ன அடிமையா? ஒரு அழகை ரசிக்கக் கூட சுதந்திரமில்லையா? எனக் கேட்பான்.

மீண்டும் கைபேசி சிணுங்கியது.

“நீரில் மலர்ந்த தாமரை
தள்ளாடும்....
உன் உருவம் கண்ட
இதயம்
அலைமோதும்....... துலா

வாசு காட்டிய வரிகளை திஷான் வாசிக்காவிட்டாலும் சித்தாரா வாசித்தாள்.

காதலுக்கு ஆண், பெண் என்ற கோணங்கள் இல்லை.



# 3. மல்லிகை

**மலையகமக்கள் மனங்களிலே**
**மல்லிகைபூக்கள் மலர்ந்திருக்கும்**
**தக்கவைத்திட தலைமைகள் யாவும் அதை**
**ஒன்றுபட்டால் நல்லபலனிருக்கும்**

(மொணறாகலை கவிஞர் காளிதாசன்)

ஹிந்துகலை கோவில் தெருவிலிருந்து நேராக நடந்து சிறு கடை வீதியைக் கடந்தாள் சித்தாரா. அங்கிருந்து ஒற்றையடி படிக்கட்டு அதன் வழியே நடக்கின்றபோது அம்புகாமம் தெரிகிறது. அம்பைக் கொண்டு காமன்கூத்து ஆடிய தோட்டத்தை அப்படிக்கூறி இருப்பார்கள். அங்கே இருக்கும் ப்ரியா வீட்டுக்கு ஒரு விருந்தாளி சித்தாரா. அவர்கள் பள்ளித் தோழிகள் ப்ரியாவின் சிறிய மாளிகை வீடு மல்லிகைத் தோட்டத்தை அடுத்து காணப்பட்டது.

செடி மல்லிகை ஒரு புறமும், கொடி மல்லிகை ஒரு புறமும் குண்டு மல்லிகை, கொத்து மல்லிகை , வாடா மல்லிகை, சாத்து மல்லிகை என வர்த்தகப்பயிர்ச்செய்கையாக வளர்க்கப்பட்ட மலர்த்தோட்டம் அது. வெள்ளிக்கிழமைகளில் ஒவ்வொரு கடைகளுக்கும் மல்லிகைச்சரங்கள் தேவைப்படுவதால் மல்லிகைச்செய்கை நல்ல வருமானமுள்ள தொழிலாக விளங்குகிறது.

ஹாய் சித்தாரா ! என தோழி அவளை வரவேற்று உபசரித்தாள்.

செவ்வந்தி தோட்டக்காரி மல்லிகைத் தோட்டம் வந்தாள் என்றும் கவிஞர்கள் கவிமாலைக் கட்டவும் முடியும்.

ஆடி மாதம் ஆடித்திருவிழா நடைபெறும் காலம். எத்தனையோ முறை ப்ரியா சித்தாராவை வரச்சொல்லியும் வரவில்லை. இம்முறைதான் வந்திருக்கிறாள்.

நேற்று தீமிதிப்பு, இன்று தேர்த்திருவிழா, நாளை மாவிளக்குப்பூசை, நாளை மறுநாள் மஞ்சள் நீராட்டு என கோவில் நாட்காட்டியில் குறித்திருப்பதைப்படித்தாள் ப்ரியா, இன்றும், நாளையும் குறைந்தது ஆயிரம் மீற்றர் சரங்கள் வரை விற்பனை ஆகுமே ! சித்தாரா கேட்டாள் போனமுறை நாலாயிரம் மீற்றர். இந்த முறை பால்குட பவனி இருப்பதால் ஆறாயிரம் மீற்றர் வரை தேவைப்படும்.

அம்மாவும், மாமியும், கனவரல்ல பெண்கள் இருவரும் சரம் கட்டுகிறார்கள். நீ என்ன தலையில் பூ இல்லாமல் இருக்கிறாய்? வா சரம் வைத்து விடுகிறேன் என மொட்டு அவிழ்ந்த குண்டுமல்லிகைச் சரத்தை சித்திராவின் மேகக் கூந்தலில் சூடிவிட்டாள் ப்ரியா!

கண்ணாடியில் சரம் சூடப்பட்ட அழகைப்பார்த்தாள். பாவி இப்படி ஒரு நாளில் தானே தனக்கு தெரியாமல் அவன் படம் எடுத்து போனில் வைத்துள்ளான்.

எப்படி என்படம் போனுல? ஒரு நாகரீகமாகக் கேட்டாள் சித்தாரா.

அழகை ரசிப்பதற்கு கண்கள் வேண்டும். அது என்னிடமிருந்தது. இப்ப சிங்கள பொண்ணு மூக்கு குத்திக்கிட்டா நாங்க ரசிக்கிறோமில்ல முஸ்லிம் பொண்ணு உதட்டு சாயம் போட்டா பசுந்தா தெரியுதினு ரசிப்போமில்ல அது போலத்தான் கிறிஸ்தவ பொண்ணு மல்லிகைச்சரம் வைச்சிட்டு வந்தப்போ அழகா இருந்திச்சி படம் எடுடானு மூளை சொல்லிச்சி எடுத்திட்டேன்.

அப்ப.. அதற்கு ?

அழகை ரசிக்க இந்த நாட்டில் சுதந்திரம் உள்ளதாக நினைக்கிறேன். நீங்க பிரஷ்னோ, நவின் படங்களை வைச்சி பெருமைப்படுவீங்க அவுங்கள உங்களுக்குத் தெரியாது? உங்களையும் அவுங்க காணப்போறதில்ல. என்ன நான் கண்டவுங்கள எடுத்து வைத்திருக்கேன். உங்களுக்கு ஆண் நண்பர் அறிமுகமான பின் அழிச்சிடுவேன்.

அவனது வார்த்தைகளில் ஏதோ சித்தாந்தம் இருப்பதாக அவள் தெரிந்து கொண்டாள். அவன் யார்? அவன் குடும்பம் எது? என தேடிப்பார்க்க நினைத்தவளுக்கு நாய் முள்ளும், அஞ்சாண் கட்டையும் அவன் காணப்பட்ட இடங்களென தெரியவந்தது. உடனே ப்ரியாவை பார்க்க வந்தாள் வந்தவளின்,

“வலை” ஒரு சுறாவை தேடும் நிலைக்கு வந்தது.

ம்.. எப்படி ஆரம்பிப்பது. என்ன அடையாளம் சொல்வது இல்ல எப்படியும் ஹிந்துகலை சந்தியில் இரவு தேர் வரும் நேரம் சந்திக்க முடியும்!

சித்தாரா.. ஒரு வெப் தளத்தில் ஓடிய விபரணச் சித்திரத்தின் ஆய்வை பார்த்துக் கொண்டிருக்கும்போது.

“அக்கா”... எங்கோ கேட்ட குரல் மாதிரி

ப்ரியா ... ஆட்கள் வந்திருக்காங்க
கதவைத்திறக்கும் போது வெளியே த்ரீவீல் வாசு

மாலை வேணும் ஐநூறு மீற்றர்

செவ்வந்திப் பூவில் வேணுமா? இப்பதான் புதுப்பூ வந்திருக்கு அட்வான்ஸ் கொடுங்க ஆறுமணிக்கு எடுக்கலாம்

அப்ப ஐநூறு பூ கொடுங்க நாங்க சாத்துப்படி செய்துக்கிறம்

பூக்களை எடுத்துச் சென்றபின் யார் ஐயர் மகனா சாத்துப்படி பற்றி பேசுறானே?

இல்ல! அவன் “வாசு” வாசுதேவனு சொல்வாங்க.

“நல்ல ஸ்மாற்றா இருக்கிறானே”! அடிக்கடி பூவாங்க வருவானோ?

“இல்ல”! நீ நினைக்கிறமாதிரி அவுங்க அப்பா ஒரு கொலை வழக்கில சிறையில் இருக்காரு! அதனால அவன் அப்புத்தளை பங்கட்டியில் இருக்கிறான்! அம்மா பின்னக்கட்டையில் இருக்கார். வீடு பூட்டிக்கெடக்கு

இப்ப ஒரு அநாதை மாதிரி..



# 4. சூரியகாந்தி

**உதயக்கதிரலை ஒளிரும் பொழுதுதன்**
**இதயக் கதவுகள் திறக்கிறதுஅது**
**எண்ணத்துவானில் இலக்கியத் தாரகை**
**விண்ணில் பறந்து ஜொலிக்கிறது**

இராதாமணாளன் ஹப்புதலை (வெண்கட்டி)

யார் அநாதை? தனது மனசுக்குள் ஒரு கட்டு மத்தாப்பை கொளுத்திப்போட்டு தீப்பொறி பறக்கவிட்டவனா?
வா என்ற சொல் மூலம் சுவாசத்தை நிரப்பியவனா?

ச்சீ... என்னடா "தீரிவீல்" என தூக்கிப்போட்டு விட முடியுமா?
ஏதோ.. ஒரு அநாதை என ஒதுங்கிப்போக முடியுமா?

பங்கட்டியில் பள்ளி மாணவியரின் தாடி அண்ணாவென்ற மரியாதை வார்த்தைக்கு சொந்தக்காரன். கஹகொல்ல கரப்பந்து வீரர்களுக்கு உற்ற தோழன். தாடி என்றால் ஏதோ தீவிரவாதக் கட்சிக்காக வளர்த்த தாடியல்ல. ஒரு தந்தையின் விடுதலைக்காக நேர்ந்து கொண்ட கடமை அது. ஒரு சுருட்டுப் புகையின் வாசத்தை அறியாத தாடியது. போதையின் நடுக்கத்தையும், நாற்றத்தையும் தேடாத தாடியது.

மெதுவாக நமுனை மலையின் நகரும் ஒளிரத் தொடங்கியது. நாதஸ்வரம் ஒன்றன் பின் ஒன்றாக கீர்த்தனையில் இறங்கின. மேளங்கள் விரல் தாளத்தையும், சிறு தடியின் மோதலையும் வெளிப்படுத்தின. மின்குமிழ்கள் ஒளி எழுப்பி விஞ்ஞான அணிவகுப்புச் செய்தன.

ப்ரியா, சித்தாரா இருவரும் ஒன்பது தேர்களுக்கும் பூசைத் தட்டுகளை ஒழுங்கு செய்து சிறு பச்சைப் பந்தலில் காத்து நின்றனர். அதுபோல ஆயிரம் பக்த்தர்கள் ஆயிரம் பூசைத்தட்டுகள், ஒரு இந்து எழுச்சி மகாநாட்டு கண்காட்சிபோல நகரம் மிளிர்ந்தது. சிங்கள பக்தர்களும் பூசைக்கு தட்டுகளை வைத்தார்கள். சில சிங்களப் பெண்களும் அருள் வந்து ஆடினார்கள். தேர்ப்பவனி தொடராக வந்துகொண்டிருந்தது.

ஹிந்துகலை தேர் வருவதாக பேசிக் கொண்டார்கள். அதற்கு முன்னே ஒரு பறவைக்காவடி வருவதாகவும் ஓடிச் சென்று பார்த்து வந்த சிறுவர்கள் கூறினார்கள்.

அரோஹரா ! அரோஹரா ! ப்ரியாவின் அம்மா பெரிதாகக்கூவினார். சில பாட்டிமார் குரவை ஒலி எழுப்பினர். பள்ளி மாணவியர் பாற்குடம் சுமந்து வந்தனர். அவர்களின் பின்னால் தோள், முதுகு கால், கைகள், கன்னங்கள் எங்கும் கொளுவிகள் மூலம் குத்தப்பட்டு ஒரு இளைஞன் அந்தரத்தில் தொங்குகிறான்.

அடி அங்க பாருடி. ப்ரியா சொல்ல சித்தாரா பார்த்தாள்.!

பறவைக்காவடியில் ஒரு சிட்டுக்குருவியாக வாசு. இதயத்தில் ஓடிவரும் இரத்தம் துள்ளிகுதித்தது.

வாசு ஏன்டா...?

அவனுக்கு அவள் அவனருகில் இருப்பது தெரியாமல் இருக்கலாம். அருளில் இருப்பவனுக்கு ஏதோ ஒளி பரவும் காட்சி மட்டுமே கண்ணுக்குள் விழுவதால் அவன் மேலும், கீழும் பறந்து கொண்டே இருந்தான். அவனது தந்தையின் விடுதலை ஒன்றே முதற் தேவை.

தேர்கள் வந்தன, மேளக்கச்சேரி வந்தது. ஒற்றைக்கால் மனிதன் வந்தான். அவை எவையுமே சித்தாராவை மகிழச்செய்யவில்லை. பறவைக்காவடி பின்னே அவள் நடந்தாள். அவன் நினைவும் பின்னே தொடர்ந்தது.

அடுத்த நாள் பொழுது மந்தமாகவே விடிந்தது. பலரும் தூங்கி வழிந்தார்கள். சிலர் ஒன்பது மணிக்கு மேலும் படுக்கையில் கிடந்தார்கள்.

பகல் 12 மணிக்கு சித்தாரா வாசுவை அழைபேசியில் அழைத்தாள்.

"நான் ஹிந்துகலை சந்திக்கு வருகிறேன் வீட்டில் விட்டு விடுவீங்களா"?

ம்...சரி வாங்க. அவன் இருந்த உடல் சோர்வுக்கு இப்படியான பதிலும் வந்திருக்கக்கூடும்.

நீங்க எப்ப இங்கு வந்தீங்க?

ப்ரியா அக்கா செவ்வந்தி கொண்டு வரச் சொன்னாங்க.

அப்ப இரவு தேர் பார்த்திங்களா?

இல்ல. நான் கிறிஸ்தவ பொண்ணுதானே. நானும் ப்ரியாவும் வீட்டில் நின்னுட்டம்.

அவள் தன்னை இரவு பார்க்கவில்லை என்றபோது அவனுக்கு சற்று ஆறுதல் கிடைத்தது.

அவளை ஏற்றிக்கொண்டு எல்லை நகரம், பதுளைச்சந்தி, நெருப்பு ஊர் கடந்து வலது குறைந்தோர் பள்ளி அருகில் வந்தவுடன்...

ஆஹா அழகான பூக்கள் கொஞ்சம் நிறுத்துங்கள் என்றாள்.

பல பூச்செடிகள், பூக்களைத் தடவித், தடவி அன்பு காட்டினாள். ஐநூறு ரூபா கொடுத்து அப்படியே சூரியகாந்திபூ தொட்டியோடு வாங்கி வண்டியில் வைத்தாள்.

நாயபெத்தை கடந்து அவள் வீட்டுத் தெரு வந்தது. கீழே இறங்கியவள் பெரிய மெழுகுவர்த்தியை எடுத்து ஏற்றினாள். மெதுவாக நடந்து வெண் சிலுவை ஆலயம் நோக்கி நடந்தாள்

சித்தாரா பூச்சாடி

அது உங்களுக்கு, பங்கட்டியில வைச்சு பாதுகாப்பாக வளருங்க. நான் வந்து பார்ப்பேன்.

இப்ப என்ன செய்யிறீங்க ?

என்னுட்டு மாமாவுக்கு விடுதலை வேண்டி யேசுவை மன்றாடுகிறேன்.

வாசு உணர்ந்து கொண்டான் இரவு அவள் அவனை பறவையாக பார்த்திருக்கிறாள் என்பதையும் தனது தந்தை ஒரு சிறைப்பறவை என்பதையும் தெரிந்து கொண்டாள்.

அவன் ஓடி வந்தான்.

சித்தாரா என் அப்பா கண்டிச்சிறையில் .

“எல்லாம் தெரியும் அடுத்த முறை வழக்கு வரும் நாளில் நானும் வருவேன்” பறவைக்காவடி அலங்கரிக்க செவ்வந்திப்பூ நானே தருவேன்”

மதங்கள் மனிதர்களைப் பிரிக்கலாம்.

நல்ல மனங்கள் மதங்களை உயர்த்தி விடுகின்றன.
வாசு நாட்குறிப்பில் எழுதினான்.



# 5. ரோஜா

**என் உள்ளத்துக்குள்**
**பேனைவிட்டு**
**என் உயிரில் மைதொட்டு**
**வார்த்தையள்ளி**
**மனசெழுதும் மடல் இது**

**ரோசப்பூவாய்**
**வாசம் கசிந்து**
**நெஞ்சக்கூட்டைஆர்ப்பரித்த**
**நாட்கனவை......**

தியத்தலாவைஎச் எப் ரிஸ்னா
(புரவலர் பூங்கா- 30)

"திஷான்" கணினி அச்சகத்தின் கதவுகள் வாடிக்கையாளருக்காக திறந்து கிடந்தது. பத்துமணிக்கு ஒரு இளைஞன் அறையை தள்ளித்திறந்தான்!
ஏஸி தூசி தட்டி வீசியது.

ஆம் வாங்க..
பிரியங்கா வரவேற்றாள்.

எனக்கு எசைன்மென்ட் பிரிண்ட் செய்து, பைண்ட் பண்ண வேண்டும்.

எழுதிய கோவைகளையும், டிசைன்ஸ் பற்றியும் சொல்லுங்க...

அவன் லெப் திறந்து சில டிசைன்ஸ், சில தரவுகள், சில தகவல்கள் காட்டினான்.
பாஸ்வேர்ட் எழுதிக் கொடுத்தான்.

வேறு சில வேலைகளை முடித்த பிரயங்கா லெப்பை திறந்து புகும் வார்த்தையை அறிவித்தாள்.

தீபரட்சகன் "பி.எஸ்சி"என படத்துடன் வந்தான்.
ஏதோ ஆய்வு விடயமாக ஆங்கிலத்தில் அடித்து நொறுக்கி இருந்தான். அதன் தமிழ் மொழிபெயர்ப்பைச் செய்ய வேண்டும்.

டேய் தீபா நீ பாதி, பாதியாக கொண்டு வந்து தீயா என்னை வேலை செய்யச் சொன்னா எப்படிடா? குறும்பா லெப்பில் பதிந்து வைத்து மூடினாள்.

அவன் வந்தான் எப்படி பேஜ் செய்திங்களா? என்றான். "மலையக மலர் வளர்ப்பு" என்ற வரியை பார்த்து சித்தாராவிடம் சரியான எழுத்துப் பிழைங்க என்றான்.

ஓடிச்சென்று பார்த்தபோது எல்லாக் கணினிபோலவும் இங்கேயும் குறும்பு நடந்திருந்தது.

"என்னடி? இது" ப்ரியங்கா!

சயன்ஸ் படிச்சவங்க கேட்காததா, பார்க்காததா, தமது தவறை சாதுரியமாக சமாளித்தாள்.

சித்தாரா விரைவாக எழுத்துத்தவறுகளை மாற்றி அமைத்தாள். சரி இப்பப் பாருங்க.

இருவரும் படம் தேடினார்கள். உலகம், இலங்கை, விக்கிபீடியா, கூகுள், யாஹு, முகப்புத்தகம், இணைய மலர்கள் என இரண்டு மணிநேர ஓடிப்பிடித்த எலி ஓட்டம் அதன் பின் பக்கம் வடிவமைப்பு, நான்கு வர்ண முன்னட்டை அதில் விவசாய அதிகாரி சாயலில் அழகானப் பெண்.

ஏஸியிலும் ப்ரியங்கா வேர்த்திருந்தாள். பைண்ட் செய்து முடித்த பின் எவ்வளவு? எனக் கேட்டான்

உயிரை எடுத்ததற்கும் சேர்த்து ஆயிரமென்றாள்.

அப்புத்தளையில் உள்ளவங்க உயிர் விலை அவ்வளவு குறைவா?

சித்தாரா வாய் விட்டுச்சிரித்தாள்.

படிப்புக்காக செய்ததாலதான் குறைச்சிக் கேட்டேன். என்றாள் பிரியங்கா.

மிஸ்டர் நீங்க கொண்டு வந்த பூஞ்செடிய விட்டுட்டு போறீங்க...

ஓ சிவப்பு ரோஜாவா பூவும், செடியும் பிரியங்காவுக்குனு ஈமெயில் போட்டேனே பார்க்கல்லையா?


அவன் போய் விட்டான்.

பிரியங்கா ரோஜா இலை. மலர், மொட்டு, இதழ் தடவிப்பார்த்தாள். ஒரு இனம் புரியாத ஸ்பரிசம் இதயத்தை தொட்டது.

தீபா! நீ எனக்கு தீயா?

அவள் செட்டிங் பண்ணும்போது

ப்ரியமானவளுக்கு "ரோஜாவின் நேசம்". தீப இரட்சகன் நேரில் மட்டுமல்ல இணையத்திலும் அவளை ஆட்கொண்டிருந்தான்.



# 6. கனகாம்பரம்

**முன்னேறத்துடிப்பவனின்**
**மூச்சுக்காற்று**
**எண்களின் ஏகாதியத்தியம்**
**விதியின் விளம்பரப்படம்**
**முடிச்சுகளின் முகாம்**

ஹல்தமுல்லை கவிஞர் வெங்கடேஸ்வரன்
(நேற்றைய நினைவுகள்)

திஷான் அலுவலக மேசையின் முன் அமர்ந்து லெஜர்களில் மேய்ந்தான். சித்தாரா கணக்கு வழக்குக்கான ஆவணங்களை ஆதாரப்படுத்திக்கொண்டிருந்தாள்.

நம்பிக்கைதான் தான் ஒளிக்கீற்று. அவன் சித்தாரா, ப்ரியங்கா இருவரையும் சரியாக நெறிப்படுத்தியிருந்தான்.

அவர்களும் ஒரு நேர்த்தியை அந்த அலுவலகத்தில் விதைத்து வைத்திருந்தனர். அநாவசிய நண்பர்கள் வருவதில்லை. தோழியர் இருவரும் புதிய ஜோக்ஸை பகிர்ந்து கொள்வார்கள். பென்ட்ரைவ் வைரஸ் வைச்சிருக்கு பாவம் ஆம்புளைங்க பிரியங்கா சொல்ல சித்தாரா சிரிப்பாள்.

ஓன்லைன்னில் தீபா வருகிறான். சித்தாரா சொல்ல ப்ரியங்கா கிள்ளிச்சிரித்தாள்.

எல்லோரும் நல்லவர்கள். சில நேரங்களில் அதீத அக்கறைகூட வேதனையின் தோற்றமாகி விடுகிறது. அதுவே பிரிவின் ஆரம்பமாகியும் விடுகின்றது. சித்தாரா, பிரியங்கா இருவரும் கடைக்குட்டிகள். வீட்டுச் செல்லம், விழிகளில் தெரியும். சிலவேளை கவனக் குறைவால் அவர்கள் விடும் பிழைகளை கண்ணால் மட்டுமே காட்டுவான். அவர்கள் அதனை சரியென வாதிடமாட்டார்கள். வாதிடும் நேரத்தில் சில நூறுகள் தேடும் நாழிகைகள் கரைந்துவிடும்.

சேர், துலாஞ்சனி
ஸ்கைப்... அருகில் வந்தான். அவர்கள் இடைவேளைக்காக வெளியே வந்தார்கள்.

ஒரு தனி மனிதனின் அந்தரங்கம் மிகவும் பக்குவமானது. அது வெளியே தெரியும்போது சந்தி சிரித்துவிடும். வாழ்க்கை திறந்த புத்தகமல்ல உள்ளே இரகசியமான உலகம் இருக்க வேண்டும். அது சுயநலமாகாது, சுயகௌரவமாகும்.

“துலா எப்படி இருக்கிற?”

நான்....எங்கடா இருக்கேன். அந்த தோவையில் நடந்த சந்திப்பு ஏன் நடந்தது?

நினைவு.. நினைவு எல்லா பக்கமும் உன் நினைவு தான்டா! நேற்று கிரிவிகாரைக்கு போனபோது படுத்திருந்த புத்தர் சிலை மறைந்து நீ இருந்து கால் நீட்டி இருப்பதுபோல இருந்தது. அந்த பிள்ளை

கொடுத்த கொலுசு என் நடையை கட்டுப்படுத்திருக்கு. இப்ப அம்மா துள்ளி ஓடாதே என என்னைச் சொல்வதில்லை.
மெல்ல நடக்கப் பழகிட்டேன்.

அவன் பிரியங்காவின் உயர்ந்த குணத்தை தெரிந்திருந்தான். அவன் எதையுமே வாங்கி கொடுக்க முடியாத நேரம் ஒரு கொலுசை மட்டும் கொடுத்தாளே!

டேய்! அன்றைக்கு எனக்கு எதையுமே வாங்கி கொடுக்கல்லையே அவ்வளவு கஞ்சமா?

துலா... ஒரு நிமிடம் நெருப்பில் இறங்கியதுபோல இருந்தது. ஒரு தேநீர் குடிக்க முடியாத நிலை. எனக்கு பெண் நண்பர்கள் இல்லை. நான் எப்படி உன்னோடு பேசனும், நடக்கனுமுனு தெரியல்ல. ஒரே அதிர்ச்சி!

டேய்! சுடச்சுட.. சோளம் அவித்திருந்தார்களே! வாங்கிக் கொடுக்கலையே. துலா இருபது ரூபா செலவு செய்யாத ஒரு இளைஞனைக்கண்டு சிரித்திருப்பாள்.

சோளம் சாப்பிடும் அளவு உனக்கு பல் முளைக்கவில்லையே.
ச்சீ.. ஏன் பல் எல்லாம் விழுந்திருச்சி. எழுபது வயது ஆச்சி என்றாள்.

அக்கா.. ருஷியாவிலிருந்து வருறாங்க. ஒரு வாரம் தங்குவாங்க. நீயும், உன் நங்கீகளும் வந்து பார்த்திட்டு போவீங்களா? தேதி.. ஒக்டோபர் இருபத்திதேழு.

நாளை வா என்றாலும் ஓடிபோவென மனம் சொல்லுமே.

ஒக்டோபர் இருபத்தேழு எப்போது வரும் துலா விடை பெற.... அவர்கள் வந்தார்கள். நாங்க அநுராதபுரம் செல்ல திகதி வந்திருக்கு. என்றான் திஷான்.

யாவ்! பிரியங்கா.. மகிழ்ந்தாள். அப்படியே தீபாவையும் வன்னியில் பார்த்துவிட்டு வரலாம். வீட்டில் அனுமதி கேட்கத் தேவையில்ல.

அப்பநான், சேர்.. நாங்க ரெண்டு பொண்ணுகள் மட்டும் வருவோம். நீங்க மட்டும் தனியாக ஒரு நண்பரை சேர்த்துக்கொள்ளுங்கள். எனக்கு யார் நண்பர், எல்லோரும் பிஸ்னஸ் பிஸி!

சேர், நண்பனுக்கு காதலியை காட்டிடாதே வாய்ப்பாட்டை படிச்சிருக்கிறார்டீ...

“ஏன் சேர், அன்று தோவைக்கு வந்த. வாசுவைக் கேளுங்க...?”


சித்தாராவின் மனதில் வாசு இருப்பதை ப்ரியங்கா, திஷான் அறிந்திருக்கவில்லை. சரி கேட்டுப் பார்க்கலாம். ஐந்து நாள் வருமானம் பாதிக்கப்படுமே என ஒப்பாரி வைப்பான். பிரியங்கா.. அலுவலத்தில் வளரும் ரோஜாவின் இதழ்களைத் தொட்டாள். தீபாவை காணப்போகும் வேகம் நெகிழ்வைத்தந்தது.

அன்று மாலை! வாசுவின் “வண்டியில் வரும்போது நாளை கிஷான் கேட்கும்போது, வன்னியில் மலர்க் கூடைகள் கொடுக்க வேண்டுமெனக்கூறு” என்றாள்.

ஏன்? இவ்வளவு வேகம்.

அதானே, எந்த நாளும் கிட்டத்தில இருக்கையிலேயே ஒன்றும் நடக்காம இருக்கையில. அவ்வளவு தூரத்திற்கு ஏன் போகனும்?

சரி! உங்க சார் என்ன பரிசு கொடுப்பார்?
ஒரு கனகாம்பர பூச்செடி.



# 7. கடதாசிப்பூ

**நிலமகள் தன் அழகுதனை**
**நிலைநிறுத்திக்கொள்ள**
**மலையுடனே குன்றுகளும்**
**மனம் நிறைந்து படைத்தார்**
**அதில் அழகுமகள் அவதாரம்**

(ஹொப்டனூர் ஆறுமுகம் கோகிலதாஸ்)

முள்ளிருக்கும், கொத்து மலர். பல வர்ணம் கலந்திருக்கும். சிறு செடியாகவும், பெரும் கொடி வேராகவும் படரும். வரட்சியைத் தாங்கும் மலருக்குள் சிறு மலர் போன்று மகரந்த மலர்கள் பூத்திருக்கும். நீண்ட நாள் வாடாமலிருக்கும். தேனும், வாசமும் இல்லாத மலர் அதனால் கடதாசியில் செய்த மலராகத் தோன்றும். அந்த மலர்கள் மரங்களிலும், பூந்தொட்டிகளிலும் பூத்து இளஞ்சிவப்பு, சிவப்பு, செம்மஞ்சள், வெள்ளை என நிறங்களைக் காட்டி சிரிக்கும்.

ஒரு தோப்பு வீட்டு முன் தீபா காரை நிறுத்தினான். முன் சீட்டில் இருந்து திஷான் இறங்கினான், பின் சீட்டலிருந்து ப்ரியங்கா இறங்கினாள். இடது பக்க பின் கதவு வழியாக வாசு இறங்க அவன் பின்னால் சித்தாரா இறங்கினாள்.

துலாஞ்சனி, அவள் அக்கா, அப்பா, அம்மா என அனைவரும் காரைச் சுற்றி நின்றார்கள். சித்தாரா ஒரு தட்டில் பழங்களை நிரப்பி நடக்க, பிரியங்கா ஒரு தட்டு நிறைய மல்லிகை, செவ்வந்தி, கானேசன், ரோஜா மலர், சூரியகாந்தி மலர்களை எடுத்து நடந்தாள்.

வாசு அந்தூரியம், ஓர்கிட் மலர்ச் சட்டிகளை வாசு ஒரு கையிலும் மறுகையில் மரக்கறிகள் நிறைந்த கூடையையும் எடுத்து நடந்தான். ஆண்கள் இளம் பச்சை சட்டைகளையும், வெள்ளை நிற வேட்டிகளையும் அணிந்திருந்தனர். பெண்கள் பச்சை நிற சேலை உடுத்தி தலைக்கு கனகாம்பர சரம் சூடி இருந்தனர். இந்த நிகழ்வின் நெறியாள்கை சித்தாரா எனச் சொல்ல வேண்டும். போக்குவரத்து ஏற்பாடுகள் தீபா, வாசு, திஷானுடையது.

மலையகத்தின் படித்த பரம்பரையின் நுழைவு துலாஞ்சனி குடும்பத்தை ஒரு முறை திக்குமுக்காட செய்தது. தமிழ் அது அவர்களின் உடல்களில் தெரிந்தது. சிங்களம் அவர்களால் பதிலுக்கு செலவாகியது. ஆங்கிலம் பகிர்வுக்கு வழிவகுத்தது.

விசாலமான வரவேற்பு மண்டபம், ஒரு சின்னத்துரையின் மாளிகை போன்ற வீடு பரந்து கிடந்தது. துலாஞ்சனியின் தாத்தா ஒரு காலத்தில் அநுராதபுரத்தின் நகரசபை உறுப்பினராக இருந்ததாகவும் ஒரு பெரிய புகைப்படம் காட்டியது.

நீண்ட மெத்தைக் கதிரைகள். திஷான், தீபன், வாசு மூவரும் தனித்தனி ஆசனங்களில் அமர சித்தாரா.

பிரியங்கா இருவருமாக ஒரே நீண்ட கதிரையில் அமர்ந்தனர்.

துலாஞ்சனி கண்ணாடி கிண்ணத்தில் நீர் கொண்டு வந்தாள். அதனை தொட்டு வணங்க வேண்டும். அதனை சரியாக செய்தார்கள்.

சித்தாரா எழுந்து உள்ளே சென்றாள். தயாராகக் கொண்டு வந்த கனகாம்பர மலர்ச்சரங்களை துலா, அம்மா, அக்கா கூந்தலில் சூடினாள். அவர்கள் மகிழ்வில் நெகிழ்ந்தார்கள். கண்ணாடியில் பார்த்து ஹிந்தி நடிகை மாதிரி என்றார்கள். சித்தாரா ஸ்ரிக்கர் பொட்டு ஒன்றை துலாவின் நெற்றியில் வைத்துவிட்டாள்.

துலா அனைவருக்கும் கொக்கோ கொண்டுவரும்போது அவள் அப்பா. "துவ" என ஆச்சரியப்பட்டார்.

"இப்ப இவதான்டா குயீன். தீபாவிடம் சாடை செய்தான் வாசு. திஷானின் கையை அழுத்தி தனது துடிப்பைக் காட்டினான்.

சித்தாரா எனக்கு தங்கை இல்லாத குறையை எப்படிச் சமாளிக்கிறா அவளை கட்டப்போறவன் நிச்சயமா கொடுத்து வைச்சவன். அவ கன்னியர் மடத்தில் வளர்ந்த பிள்ளை அதனால் சில அலங்கார வேலைகள், அணுகு முறைகளில் வித்தியாசத்தை காட்டுவாள். அதில் புதுமை இருக்கும். மண்ணின் மனமுமிருக்கும்!

திஷான் இனிப்புகள், தேயிலை, பாணி, சக்கரைக்கட்டி, தெமோதரை ஓவியக்காட்சி என பொருட்களை மேசையில் அடுக்கினான். கனகாம்பர பூச்செடியை தொட்டிலோடு வரவேற்பறைப் படியின் கரையில் வைத்தான்.

தீபா.. மூன்று அலங்காரப் பொருட்கள் அடங்கிய பொதிகளை பிரயங்கா ஊடாகக் கொடுத்தான். பேஸ்வோஸ், சம்போ, எயார்கலர், டென்டொப் க்ரீம், எயார்லோஷன், எயார்வெக்ஸ், பொடிலோஷன், நெயில்பொலிஸ், பேர்பியும் என பொருட்களை அடுக்கிக்கொண்டுப் போனான்.

இது என்ன ஒரு அலங்காரத் தெருவா? துலா.. சினுங்கினாள்.

ஏய்! இவர்கள் என்ன மாதிரி ஆறாவது தலைமுறையை அனுபவிக்கிறார்கள். புதுமை இருக்கிறது ஆனால் மரபுதான் அடிப்படை. நாகரீகம் இருக்கிறது அங்கு அகங்காரமில்லை. செலவு இருக்கிறது அதில் ஆடம்பரமில்லை. பாசம் இருக்கிறது அதில் சுய நலமில்லை.

நாங்கள் அரச பரம்பரை என்று சொல்வதைவிட உழைக்கும் பரம்பரை என்பதை அழுத்தி சொல்கிறார்கள். சுரண்டப்படும் தலைமுறையின் இறுதி வாரிசுகள் எவரையும் சுரண்டுவதுமில்லை. சுரண்ட அனுமதிப்பதுமில்லை.

இந்தியாவில் நீங்க எந்த ஊர்? துலாவின் மாமா ஒருவர் கேட்டுப்பார்த்தார்.

நாங்கள் இந்தியர்கள் இல்லை.
எமக்கு இந்தியாவில் ஊரும் தெரியாது.
வாசு அழகாக பதில் சொன்னான். உங்களுக்கு ஈரானில் எந்த ஊரு? சொல்லமுடியாதில்ல!

உண்மையான மீனவனுக்கு கரைகள் சொந்தமாகும் போது, பனைமரத்தில் ஏறும் ஈழவர்களுக்கு பனை சொந்தமாகும்போது, தேயிலை மாந்தருக்கு தேயிலையே சொந்தம் என்றான்.

மல்லி ... நீங்க.. அரசசேவையாளரா? உங்க அப்பா தொழிற்சங்க வாதியா?

இல்லை. "நான் ஒரு த்ரிவீலர் ஓட்டுனர் எனது அப்பா ஒரு மலர் செய்கையாளர்"

நீங்க.. எப்படி? திஷானுடன்.
அவர் எங்கள் குருப்பில ஒருவர். திறமைகளுக்கு மட்டுமே நாங்க உரிமை கொடுப்போம் என்றான் தீபா.

மாலை நேரம் துலாவின் குடும்பத்தோடு அவர்கள் ஆயிரம்கால் மண்டபத்தை தரிசிக்க சென்றார்கள். மாளிகைகள் மட்டுமல்ல, மனித வாழ்வும் ஆயிரம் தூண்களையும், ஆயிரம் அர்த்தங்களையும் கொண்டு விளங்குகிறது. கடந்த காலங்கள் புதிய தலைமுறைக்கு காட்சிகளை மட்டுமல்ல தெளிவான கருத்துக்களையும் காட்டிக்கொண்டே இருக்கின்றன.

# 8. செவ்வரத்தை

**விழித்தெழு உன் மூடிய விழிகொண்டு**
**வியக்கவைக்கும் விந்தைகள்**
**வியாபகமாய் விளையாடிக்கொண்டிருக்கின்றன**

(ஜெயகுமார் ஷான் கும்புக்கனை)

இரவு ஒன்பது மணி, அநுராதபுரம் பாலித்த வளவிலிருந்து அவர்கள் புறப்பட்டார்கள். இரவு உணவாக முழுவதும் மரக்கறியால் ஆன உணவு வகைகள். கறிமிளகாய். பெல்பெப்பர்ஸ், அவரைக்காய், கரட், பீட், புதினாயிலை எல்லாமே சித்தாரா எடுத்துச்சென்றவை.

துலாவின் அக்கா, திஷான் அருகில் வந்தாள்.

"தோல்வி என்பது என்னவென்று தெரியாதவள்"
அவள் விருப்பம் நீங்க. மறுக்கக்கூடாது என்றான்.

சித்தாரா, பிரியங்கா இருவரும் கட்டியணைத்து பெண்களிடம் விடைபெற்றனர். பெரியவர்கள் மிக உற்சாகமாக வழியனுப்பினர். இதுபோல பல நண்பர்கள் வந்து போய் இருப்பார்கள். ஆனால் புதிய, புதிய இளைஞர் குழு அவர்களுக்கு வித்தியாசத்தை காட்டி இருப்பார்களை

வவுனியா, இரவு பன்னிரெண்டு மணிக்கு விழித்திருந்தது. யாழ்ப்பாணம் பேருந்துகளும், கொழும்பு பேருந்துகளும் ஆட்களை நிரப்பிக்கொண்டு நின்றன. அவர்கள் அங்கிருந்து மன்னார் வீதியில் பயணித்தார்கள். அவர்கள் சென்றது ஒரு கிறிஸ்தவக்கிராமம்.

கீழ் தளத்தில் மெத்தைகளைப் போட்டு மூன்று இளைஞர்களும் படுத்துக்கொண்டனர். ஒரே அநுராதபுர நினைவுதான்.
பத்து தவிப்பு அழைப்பை ஏற்படுத்திருந்தாள் துலா.
பார்ப்பதும், பிரிவதும்
ஓ ! காணாமலே இருந்திருக்கலாம்.

திஷான் எழுந்து சென்று ஏதோ பேசி வந்தான்.

தீபா, சித்தாராவுக்கும், பிரியங்காவுக்கும் வசதி போதுமா?
நுளம்பு தின்று தொலைக்குமே!

குளிரில் இருந்தவர்களுக்கு இரவு சூடு தகிக்குமே!
விசிறி சரியாக ஓடுகிறதா?

வாசு.. இது ஒரு சொர்க்கமாயிற்றே!

சிலவேளை த்ரிவீலர் இருக்கையில் முடங்கிபடுத்தும் இரவை போக்கியிருப்பான். வெறும் தரையில் பேப்பர் விரித்துப் படுத்து உறங்கியுமிருக்கிறான்.

அப்பாவை நினைத்தான். “அவருக்கு வெறும் சீமெந்து மேடு படுக்கை”

கைகளே தலையணை. சில எருமை மாடுகள் மிதித்துக் கொண்டு போகும். ஒரே ஒரு நிம்மதி. கொலைக்குற்றவாளியை ஏனைய குற்றவாளிகள் மிரட்டி எதையாவது கேட்க மாட்டார்கள்.

ஆயுள் தண்டனை அல்லது தூக்கு தண்டனை கிடைத்துவிடும் ஆகையால் சிறைச்சாலை பாதுகாப்பு ஊழியரும் மிரட்டுவதில்லை..

சித்தாரா நல்ல பொண்ணு, அவள் அப்பாவைப்பற்றி எவருக்கும் சொல்லியிருக்கமாட்டாள். ஆனால் அவர்களே அதனை தெரிந்துக் கொண்டால் என்னை விலக்கி வைத்துவிடுவார்கள். சித்தாராவையும் தடுத்து பேசி பிரித்து விடுவார்கள். அவர்களாகவே தெரிந்து கொள்ளும் முன் நானே நாளை சொல்லி விடவேண்டும்.

அடுத்த நாள் விடிந்தது. ஆழ் கிணற்றில் நீர் அள்ளி குளித்தார்கள். உடைகளை கழுவினார்கள் இடியப்பம் விற்று வந்த சாகிறாகாதரிடம் இருபது தட்டும் மீன் குழம்பும் வாங்கினார்கள். இடித்த தேங்காய் சம்பல் இலவசமாகக் கிடைத்தது.
வெயில். சூடு. நல்ல பசி எடுக்கும்.

உப்பு தண்ணீர் நல்ல சுவையாகவும் உணவைக் காட்டும்.

ஆண்கள் சாப்பிடும்போது பத்திக் லுங்கிகளை மார்பு வரை கட்டிக் கொண்டு சித்தாராவும், பிரியங்காவும் குளிக்க ஆயத்தமானார்கள். டேய் உன்னை பறவையாகப் பறக்கும்போது நான் பார்த்தேனே. எவ்வளவு கஷ்டமாக இருந்தேன். இப்ப எட்டிப்பார்த்து கஷ்டப்படுடா என்று. நினைத்தாளோ?

அவர்கள் சிரித்தார்கள்
குறும்பு செய்தார்கள் நீர் அள்ளி விளையாடினார்கள். அந்த நேரம் வாசு சொன்னான். உங்ககிட்ட ரெண்டு விடயம் சொல்லனும்.

ஒன்று நான் சித்தாராவை விரும்புகிறேன்.

என்னது! அவ என்ன சொல்றாள்?

அத நீங்க தான் அண்ணன் முறையில கேட்கனும்.
மற்றது எனக்கு ஒரு பெரிய பிரச்சினை இருக்கு. அது தீர்ந்த பிறகுதான் அத நீங்க கேட்க முடியும்.

அப்படி என்ன தலை போற காரியம்? உங்க மிஸ்ஸிடம் அனுமதி கேட்கனுமா? தீபா கேட்டான்

இல்ல எங்க அப்பா..
டேய்! என்னடா உலறுற! அவன் வாயை உரிமையுடன் மூடினாள் சித்தாரா?
அந்த காட்சி அவளது விருப்பத்தை அவர்கள் அறிய செய்தது.

அந்த மணல் மண் கலந்த பூமி. அங்கு பலவித செவ்வரத்தைப் பூக்கள். அடுக்கு பூ, ஓரிதழ்பூ, ஒட்டுமுறை பூ, கடும் பச்சை நிற இலைகளுக்கு நடுவே சிவப்பு, மஞ்சள், இளஞ்சிவப்பு நிறங்களில் பெரிய பூக்களாய், மகரந்த மணிகளை வெளியே காட்டி நின்றன.

கிராமத்துப் பெண்களின் கூந்தல் சம்போ, மூலிகை மருத்துவத்தினை காட்டுகின்ற செவ்வரத்தை மலர் பெரிதாக இருந்தாலும் சில்லறைக்கு கூட வாங்குவோரில்லை.

# 9. நீல அல்லி

**எங்கள் தனித்துவத்தை**
**இழக்கவைத்துவிட்டு**
**அறிவுக் கொழுந்துகளை**
**அறுத்துஎறிந்துவிட்டு**
**தேநீரைச் சுவைத்ததெம்போடு**
**இயற்கையோடு ஊடாடடாதீர்கள்**
**நாளைஎழும்**
**புயலும் பூகம்பமும்**

கவிஞர் மா. சண்முகநாதன்
வீரகேசரி 7.5.1989

ஓர் அதிரடி தாக்குதல் நடந்த இடத்தின் கோரம்போல நண்பர்கள் மனதில் குழப்பங்கள்.

சித்தாரா முகத்தையோ, வாசுவின் முகத்தையோ பாராமல் தனியே சென்று அமர்ந்தார்கள்.

நீ... கூட எங்கிட்ட மறைச்சிட்டியா? திஷான் கேட்டான்.

பிரியங்கா சொன்னாள். நானே உங்கள போல உறைஞ்சி போயிருக்கேன். சித்தாரா எப்படி திடீரெண்டு தீபன் சொன்னான்! ஒரே வயது ஆண்களும், பெண்களும் சந்தித்து பேசும்போது அவர்களை அறியாமலேயே விரும்பத்தொடங்கி விடுவார்கள். நான் நினைக்கிறேன் இந்தப்பிரயாணம்தான் அவளை அப்படி ஒரு நிலைக்கு கொண்டு வந்திருக்கும்.

இல்ல நான் அப்படி நினைக்கல்ல நாங்க... அநுராதபுரம் போகும் நாளில் வாசுவையும் வரச் சொல்லலாம் என அவள்தான் கேட்டாள். அதனால அது இப்ப வந்ததில்ல! திஷான் ஒரு கருத்தை முன்வைத்தான்.

நானும் ஒரு தோழி! என்னாலேயே கண்டுபிடிக்க முடியவில்லை. அவளை நான் கட்டுப்படுத்த முடியாது ஆனா வாசு! ஒரு சாதாரண த்ரீவீல்லர் எப்படி பொருந்தும்?

சரி அவசரப்பட்டு எதையும் பேசவும் முடியாது. விவாதிக்கவும் முடியாது. பிரியங்கா ... நீ... வாசுவை கொஞ்சம் வரச்சொல்லு நீ.. சித்துகிட்ட போய் பேசு.

வாசு வரும் போதே கண்கள் சிவந்திருந்தான். அந்த நண்பர்கள் முகம் பார்க்காமலேயே வீட்டில் சுழலும் விசிறியைப்பார்த்தான். வீட்டில் கதவோரம் சிலந்தி பின்னியிருந்த வலையையும் அது உணவுக்காக ஒளிந்திருக்கம் நிலையையும் பார்த்தான்.

சொரி. என் பிழைதான். சித்தாராவை பிரித்து பார்க்காதீங்க. நீங்க எல்லாம் வெள்ளை ஆடுகள். நான் தான் கறுப்பு ஆடு அதுவும் பலி ஆடு.

வாழ்க்கையின் துன்பக் கேணியில் மூழ்கி எழுந்தவனுக்குத்தான் அப்படிச் சொல்லமுடியும். மூளையும், இதயம் அடிவாங்கி மரத்து போனவனால்தான் அடுத்தவர் துன்பத்தை தெரிந்து கொள்ள முடியும்.

சித்தாரா... மிக நல்ல பொண்ணு அவ என் தங்கச்சிடா.
இவ்வளவு தூரம் அம்மா, அப்பா என்னை நம்பி அனுப்பி இருக்காங்க. அவளைப்பத்தி ஊருல ஒரு கெட்ட வார்த்தையும் வரக்கூடாது. அதற்கு நான் காரணமாக இருக்கவே மாட்டேன்.

சரி அத விடுங்க... இப்ப நாங்க இத ஒரு சரியான பாதைக்கு கொண்டு போகனும்.

உங்கம்மா அப்பாவைப் பற்றி சொல்லுங்க. அவங்கள பார்த்துப் பேசனும்.

அம்மா தூய தேயிலை அமைப்பில் ஒரு இரவுத் தொழிலாளி.
சரி.. அப்பா?

அவர் ஒரு சிறைக்கைதி. அந்த உண்மை சித்தாராவுக்கு தெரியும். என் அப்பாவுக்காக ஆண்டவரை வேண்டி மண்டியிடுகின்றாள். அந்த குணம்தான் என்னையும் அவளை நேசிக்கத் தூண்டியது.

ஒவ்வொரு மனிதனுக்கும் சுயகௌரவமிருக்கும். காலையில் வாசு சொல்ல வந்ததை சித்தாரா தடுத்த நிலையையும் அவர்கள் அறிந்தார்கள்.

அந்த நேரம் சித்தாரா அந்த வட்டமேசை மாநாடுக்கு வந்தாள்.
இங்க என்ன விசாரணை நடக்குது...?

தீபா, திஷான் இருவரும் அதிர்ந்து பார்த்தனர்.

இந்த வவுனியாவில எத்தனை பேரை சிறையில் அடைத்தார்கள். அவர்கள் தாய் மண்ணை நேசித்தது குற்றமா. அது போல தான் சாமியின் பெயரால, சமயத்தின் பெயரால சமூகத்தைச் சுரண்டிய தர்மகர்த்தாவை கொலை செய்தாரு என் மாமா. அத ஏன் அவரு செய்தாரு? உங்க மாதிரி இளைஞர்கள் செய்யாம இருந்ததால்தான்.

இந்தப் பெண்கள் இருக்கிறார்களே. சிலவேளை, யாகம் வளர்த்து, தீயில் இறங்கி நீதிக்காக போராடுவார்கள்.

திஷான், தீபா இருவரும் எழுந்து நின்றார்கள். இல்ல சித்தாரா எங்களை நம்பி... உங்க வீட்டில அனுப்பியிருக்கிறார்கள்.

ஆம்! எனக்கு வீட்டாரை பற்றியோ, கடைவீதியில் இருக்கிற ஆட்களப்பத்தியோ யோசிக்க நேரமில்ல... என்னை நீங்க மூன்று பேரும் நம்புறீங்களா? நம்பாவிட்டால் வாங்க வவுனியாவிலேயே மாலை மாத்திடலாம். இல்லாட்டி எங்கள இங்கேயே விட்டுட்டு போங்க... ஊரு உலகத்தில நாங்க ஓடிவிட்டதாக சொல்லட்டும்.

தீபா.... சித்தாரா....நண்பர்கள் யார்? யாருக்கும் துன்பம் வரும்போது பக்கம் இருந்து காப்பவர்கள். நாங்க உன்னை மிகவும் பாசமாகப் பார்க்கிறோம். திஷான் உன்னை தங்கச்சி எனச்சொல்வது போலி நடிப்பில்ல. உண்மை உறவு, அதனை நீ தெரிந்திருக்கனும்.

ஆமா.... திஷான் அண்ணனுக்கு அண்ணியை பார்த்துவிட்டோம். இப்ப அவருக்கு தங்கச்சியை ஒரு நம்பிக்கையானவன் கையில் கொடுக்கும் பொறுப்பு இருக்கு. எனக்கு யாரைத் தேடிக்கொடுக்க நினைக்கிறாரு? ஒரு கூன் குருடு, ஒரு கசிப்பு முதலாளி, சரிவருமா?


சித்தாரா கொஞ்சம் பேசுறத நிறுத்தடி. யார் உன்பக்கம் இருக்காட்டியும் நான் இருப்பேனில்ல. எல்லோரும் ஒவ்வொரு துணையைத் தேடும்போது நீயும் ஒருவரை விரும்பியது தப்பே இல்லை. முதலில் ஆத்திரத்தை நிறுத்தி நாங்க மடு மாதா ஆலயத்துக்கு போய்வருவோம்.

அவர்கள் இந்துக்களாக இருந்தபோதும் சித்தாராவுக்காக தேவாலயம் சென்றார்கள். அவள் மண்டியிட்டு பிரார்த்தனை செய்யும் போது. இளைஞர்கள் ஆலய வெளியில் இரத்தம் சிந்திய மனிதரின் கீழே இருந்து அமைதி காத்தனர். ஒரு செயற்கைக் குளத்தின் நீர்த்திவலைகளில் பல நீலஅல்லிகள் சிரித்தன.

சித்தாராவும், பிரியங்காவும் வெளியில் பிரார்த்தனை முடித்து வெளியில் வந்தவுடன் திஷான் குழுவைத் தேடினார்கள். அவர்கள் அருகில் இரண்டு இஸ்லாமிய இளைஞர்கள் நின்றனர். அவர்களின் ஒருவன் வாசுவுக்கு ஒரு கடிதம் கொடுத்தான். அது வவுனியா பால்மா விநியோக நிலையம் ஒன்றின் களஞ்சிய பொறுப்பாளர் பதவிக்கான நியமனக் கடிதம்.

தீபா. வாசு இருவரும், வவுனியாவில் நின்று கொண்டனர். ஏனையவர்கள் புகைவண்டியில் அப்புத்தளை புறப்பட்டார்கள்.

வானத்தில் சந்திரன், ஒளி வீசி அல்லிகளைத் தேடினான். இரண்டு அல்லிகள் உள்ளத்துச் சந்திரன்களை நினைத்தப்படி மௌனப் பயணத்தை தொடர்ந்தன.



# 10. நித்தியகல்யாணி

**செகப்பு குருவிகள் - நீங்க**
**சிறுமரத்து பட்சிகளா?**
**சீமைக்குப் போவீங்களா?**
(ஆய்வாளர் கதிர் விமலநாதன்)

பராசக்தியில் புதுமைப்பெண்ணாக வந்தாள் கல்யாணி. அவளை கசந்தகரும்பு நாவலில் ஆசைத்தம்பி போராடும் உள்ளம் கொண்ட தங்கையாக மாற்றிக்காட்டினார். கல்யாணி என்ற கப்பலில் வடநாட்டு அரசக் குடும்பம் மாந்தோட்டம் நகரில் வந்து. இறங்கியதாக மஹாவம்சக் கதை கூறும். கல்யாணி என்பது ராகமென வித்துவான் தவில் வாசிப்பார்.

மலர்களில் நித்தியகல்யாணி ஒரு சாதாரண கிராமத்துப்பெண். அலங்காரமில்லை. பகட்டு இல்லை விலை பேசுவார் இல்லை. ஒவ்வொருநாளும் பூக்களை தந்துகொண்டிருக்கும் தாவரம்.

நூற்றுக்கணக்கான நித்தியகல்யாணி பூச்செடிகள். அதில் ஆயிரம் பூக்கள் வெள்ளை பொட்டு வைத்துக் கிடந்தன. ஆஹா! எவ்வளவு பூக்கள், யார் இவற்றை வளர்க்கிறார்கள்

சிவத்தொண்டர்கள் அல்லது இளம் துறவிகள் எனப்படும் இந்து சாதுக்கள்

என்ன அமைதி !
அமைதிக்கு பெயர்தான் சாந்தி,

குளிர் தென்றல் வந்து மோதும் இரம்மியம் குறும்பை சுமந்த செவ்விளநீர், தென்னைகள், இயற்கை விசிறியால் வீசிக்காட்டிய உப்போடை கடந்து வந்தக் காற்று.
இதுவென்ன?

இது ஒரு ஆசிரமம் முன்னாள் மகாதேசாதிபதியின் மகன் காட்டிய நினைவாலயம்.

யாருக்காக கட்டினார்?
யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளுக்காக.

தீபரட்சகனும், அவன் நண்பன் அமல்ராஜனும், பிரியங்காவும், லுக்சியாவும் அந்த அமைதி நிலையத்தை தரிசித்தனர். லுக்சியா நுழைவாயிலில் நுழையும் போதே அந்த மண்ணை மிதிக்காமல் காலணிகளைக் கழற்றினாள். கால்களினூடாக அந்த மண்ணின் புனிதத்தை உணர்ந்தாள். சிரிப்பு, உரத்துபேசுதல், கட்டளை இடுதல் போன்ற நிலை நின்றுபோகவேண்டும். ஆணவம் நீங்கும்நிலை. கண் கருவிழிக்குள் பக்திவந்து அமர்ந்து தீபமேற்றும். விரல்களால் மட்டும், உதடுகளால் மட்டும், சைகை மூலம் கட்டளைகள் நிறைவேறும். ஆலயம் உள்ளே மிக மிக அமைதி பேணப்படும்.

சிலைகளோ, உருவங்களோ இல்லாத ஒருதேர் வடிவ திருவாசி மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதனை வலம்வந்து வணங்கியபின் அதன் எதிர்த்திசை மண்டபத்தில் நடந்து தீப ஒளிகளை வணங்கினார்கள். அதன் பின் மாடக் கோவிலின் முதலாவது மாடிக்கு ஏறினார்கள். அமைதி பூத்த மண்டபம், ஏற்றிய தீபதத்திற்கு அருகில் யோகர் சுவாமியின் பெரிய உருவப்படம். அது உருவ வழிபாடு என்ற அர்த்தத்தில் வைக்கப்படவில்லை. யோகம் ஞானத்தின் வித்து எனக்காட்டும் எடுகோள்தான்.

அந்த நான்கு பேரும் தரையில் அமர்ந்துதியானம் செய்தனர். தூயகாற்று மூச்சுப்பயிற்சி ஆசன முறையில் அமர்தல், கண் மூடி நெற்றில் நினைவலைகளை நிறுத்துதல் இரத்த ஓட்டத்தை சீராக்கல் சிந்தனை சிக்கல் கழன்று விழ வேண்டும், மன அழுத்தம் நீங்கவேண்டும், அன்பும் நட்பும் பெருகவேண்டும் என்ற பிரார்த்தனை அனைவரது உள்ளத்திலும் மந்திரமாய் நிறைந்தது.

நித்தியக் கல்யாணி மலர்களே! நித்தம் நித்தம் மலர்ந்து அழகுபரப்புவீர்களாக ! உங்களிடமிருந்து நான் ஒன்றைக் கற்றுக்கொண்டேன் பக்தி என்பது மிக சாதாரண நிலையில் காணப்படுவது அது எளிமையானது. பெரிய ஊர்வலம், பெரிய ஓசைகள், பெரிய அலங்கார ஒளிகள், பெரிய மனிதர்களின் உபதேசம் உலகிலும் மனங்களிலும் பக்தியை வெற்றிடமாக்கிவிட்டன .

மலையகம் முன்னேறவில்லை எனக்கோபப்படுபவர்களும், பாடுபடுபவா்களும் அமைதி வழிப்பாட்டுக்கு ஏதாவது செய்ய வேண்டும். அதனை முருகேசு சுவாமிகள் சிறிதாக தொடங்கினார் மனிதர்களில் வல்லமை படைத்தவர்களை சிலர் வெல்ல நினைப்பதில்லை ஆனால் மிகச் சாதாரணமானவர்களை சுரண்டுவதிலும் ஏமாற்றுவதிலும் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். ஆசாரி எனப்படுவர்களும் அப்படிதான் தேவர், கவுண்டர் எனப்படுவர்களிடம் அடங்கி அனுசரித்து போவார்கள், படையாச்சி மக்களை கண்டால் விலையைக்கூட்டி, செம்பைக் காட்டி நகை விற்பார்கள், பாவம் அவர்கள் மெது மெதுவாக குறைந்து மிகச் சிலரே மிஞ்சி இருக்கும் குலத்தின் வலிமை குறைவாக இருப்பதால் திட்டமிட்டு வஞ்சிக்கப் படுவார்கள் இந்த நித்தியக் கல்யாணி மலரைப் போல.

லூக்ஷியா தான் ஒரு நித்தியக் கல்யாணி என்பதால் எப்போதும் தான் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படலாம் என்பதில் எச்சரிக்கையாக இருப்பாள். தீபா, விதுஷன், பூமிதா போன்ற விஞ்ஞானபட்டதாரிகள் தனக்கு நண்பர்களாக வந்ததை விரும்பும் லூக்ஷியா சமய வாதிகளிடமிருந்து விலகி நின்றாள். சில சமயம் அவர்கள் தாலியில் கூட சாதியை ஒட்டவைத்துவிடும். தன்மை அவளுக்கு தெரிந்திருந்தது.

அமல்ராஜ், லுக்ஷியாவிடம் கூறினான். வருகின்ற கூட்டம் எதனை தரிசிக்க வேண்டுமோ! எதனை பார்த்து திருந்த வேண்டுமோ! அதனை கண் இருந்தும் பாராமல் கருத்திருந்தும் கேளாமல்

நிற்கிறது. பலர் மிருக வெறியோடு வந்து மிருகமாகவே திரும்பிப் போகின்றார்கள்.

முதலாளித்துவ பாணியில் பணம் தேடுவது, செலவழிப்பது யாருக்கு நன்மை ? அது உலக வல்லரசு ஒன்றுக்கு இந்த தேசமக்களை அடிபணியவைக்கும் செயலாக முடியும். அதனை சரியாக இருநூற்று நாற்பத்தெட்டும் கோட்டையிலிருந்து செய்துவிடும்.

நிதர்சனங்கள் நித்திய கல்யாணி போன்றது.
"கலாநிதிகளின் ஆய்வுகள் காசின் வேர் பிடுங்கும் செயலாக உள்ளது. அவர்களால் சாமானிய மனங்களை வெல்லமுடியாது. பயந்துக் கொண்டு சில சிறந்த எழுத்தாளர்களை ஆய்வு செய்யாமல் விட்டார்கள். மிகப் பெரிய தூசனக்காரர் கொழும்பில் தூசனம் வாங்கியதும். மிகப்பெரிய சண்டியர் கதிரையின் கீழேவீழ்ந்து கிடந்ததும் யோகநிலைக்கு எதிர்மாறான நிலை எடுப்பின் விளைவுகள் அதுதான்.

தினமுரசு அற்புதன், சுதந்திரன் மாகோவைமகேசன் என்போரின் எழுத்துக்களை பல்கலைக்கழக பேராசியர்கள் கண்டுகொள்ளாமல் விட்டார்கள். உயிர்ப்பயம் அவர்களின் ஆய்வுமேல் தூக்கு கயிறாககிடந்தது.

தியாகங்கள் கொச்சைப்படுத்தப்படக் கூடாது. துரோகங்கள் போற்றப்படவும் கூடாது.
இனி நாங்கள் எங்குபோவோம். ஆசாரிகள் வாழும் செட்டி பாளையத்திற்கு, லூக்ஷியா என்னும் படையாச்சி பெண்ணின் வீட்டுக்குதான்.

# 11. காட்சிமலர்

**எங்கள் இரத்தம்**
**ஜீவ நதியாய்**
**ஓடிக்கொண்டிருக்கிறது**
**கரை படிந்த உள்ளத்தை**
**கழுவிக்கொள்ளுங்கள்**

அலகொல்ல கே. பன்னீர்ச்செல்வம்

மலர்கள் மக்கள் வாழ்வோடு கொண்டு வந்து பண்பாடு பேசும்போது இயற்கை வாழ்வு எத்தனை இரம்மியத்தை அள்ளித்தெளித்து வருகிறது. அத்தனை அருகில் இருந்து அனுபவிப்பவர்கள் தூசாக நினைத்து மூட நம்பிக்கை எனவும் நவீனத்துவ பிரதிபலிப்பு எனவும் இரு வேறு கோடுகளைப் போட்டு வாழ முடியுமா?

நேற்று திஷான், குமாரசாமி ட்யூட்டரில் வந்து நான் தொண்டமானாறு போகப்போகிறேன். ஸ்டேஷனில் சந்திக்க முடியுமா? எனக் கேட்டான். அவன் இப்போ பிரியங்கா சித்தாரா இருவரிடம் தனது அந்தரங்க விடயங்களை பகிருவதில்லை. இந்தப் பிள்ளைகள் இருக்கிறார்களே எதுவுமே தெரியாத மாதிரி இருந்து வெயிலில் காய்ந்த தேங்காய் போல் வெடித்து விடுவார்கள். அவர்கள் தங்கள் பக்க நியாயங்களை சாதுரியமாக நிறுவி விடுவார்கள்.

இப்போ... திஷான் சூடு கண்ட பூனை சித்தாரா விடயத்தில் கலங்கிப்போய் நின்றான். அதைவிட பிரியங்கா, தீபரட்சகனோடு

சர்வதேச வர்த்தக சந்தையில் சந்தித்து பேசியதற்கு சான்றாக புளூடூத்தில் படத்தை அனுப்பி வைத்தான் ஒரு புதிய உளவாளி.

இப்போதெல்லாம் துலாஞ்சலியை குலதுங்க என்று, திஷானும், திஷானை, குமாரசாமி என துலாவும் குறிப்பிடத் தொடங்கினார்கள். அம்மா குமாரசாமி யாழ்ப்பாணம் போகின்றாராம் நானும் என் ரஜரட்ட ஐ.ரீ ப்பிரண்ட் கீர்த்தனாவோட போகவா?

போகலாம் தான் ஆனால்......? அம்மா முணுமுணுத்தாள்.

என்னம்மா நொச்சியாகம ஊரே வளவு புள்ள மேல நம்பிக்கை வச்சிருக்கிறதே. அக்காவை எங்கோ ரஷ்ய நாட்டுக்கு அனுப்பிவைப்பீங்க, என்ன அனுப்ப மாட்டிங்களா?

துலா! நான் உங்க அப்பாகிட்ட கேட்டுச் சொல்றேன். ஆனா நானும் வருவேன்.

ஹாய் அம்மே! அம்மாவை கட்டியணைத்து ஒரு ஹக் கொடுத்தாள். ஓடி சென்று ஸ்கைப்பில் ஸ்டேனுக்கு வருகிறேன் எனச் சொல்லசொல்லி சித்தாராவிடம் கூறினாள்.

ஹேய்! போஸ் ரொம்ப மாறிட்டார். தங்கச்சி, தங்கச்சி என உருகியவர் இப்போ நமக்குத் தெரியாம அநுராதபுரம் போறாரடி!

ஓ! அதுவா அவர் சங்ககால மன்னராகிவிட்டார். களவொழுக்கம் காதலுக்கு தேவையை என போகிறார். பிரியங்கா கூற சித்தாரா கண்களில் நீர் சிதற சிரித்தாள்.

துலா அவரை கண்டதும் தங்கச்சிமாரைத் தேடுவாள்.

ஒரு துண்டு மஞ்சளை நூலில் கட்டி அனுப்புங்கள். தாலி காட்டட்டும்.

திசான் வந்து கணக்குகளை சரிப்பார்த்தான். இப்போ அதிகமாக கணனி தான் கட்டளைகளை பிறபித்து வைக்கும்.

பொஸ்! அநுராதபுரம் போவீங்களா? சித்தாரா கணினிவெப் அறை திரைச்சேலையை திறந்து மூன்றாவது மாடியிலிருந்து அப்புத்தளை ரயில் கடவையை பார்த்தபடி கேட்டாள். அவர்களின் மனசுகளும் இப்போது ரயில் கடவை சிவப்பு விளக்கு சமிக்ஞை என தடைகள் கண்டன.

நாங்கள் குழந்தைப் பிள்ளைகளென நினைக்கின்றவர்கள் குமரித் தனத்தை நிருபிக்கும்போது தடுமாறித்தான் போகின்றோம். திஷான் நினைத்துக்கொண்டார்

ஃபேர்சனல் வேண்டாம்! ஒஃபீஸ் விஷயம் ஏதாவது? இதுவும் ஒஃபீஸ் தான். ஒரு வேலைக்காரி ஓங்க நோனாவுக்கு கொடுத்ததாக கொடுங்க.

உங்க தங்கச்சிமாரும் வருவாங்களா? எனக்கேட்டு இருந்தாள். பொஸ் ரொம்ப லேட்டா கேக்குரீங்க புருஷன்கிட்ட அனுமதி வாங்க நேரமில்ல. சித்தாரா.. பட்டெனக் கூறினாள். இது என்ன? தொங்கு பாராளுமன்றக்காதலா? இல்ல செங்கோல் களவு போன மன்றமா? இந்தாங்க கூண்டுகிளி இதை துலாக்கிட்ட கொடுங்க. இது சாத்திர கிளி சீட்டை சரியாக எடுக்க பழகியது.

அவன் யாழ்ப்பாணம் செல்ல சின்ன சிணுங்கி வண்டியில் ஏறினான்.

சிணுங்கி வண்டி அநுராதபுரம் நிலையத்தில் நின்றவுடன் துலா வந்து. கெட் டவுண் வீயார் புக்ட். ரிஸ்வேசன் என்றாள். திஷான் இறங்கி காட்சிக்காண் கூடத்தை அடைந்தான். மாமி கீர்த்தனா. துலா மூவரும் யாழ் பயணத்தை ஆரம்பித்த போது

கிட்டார் எடுத்துப் பாடினார்கள்! இது புதுபாட்டு எந்தப் படத்தில் வருகின்றது?

**காகித மலர்களே**
**இதயம் திறந்து**
**பேசிடும் வார்த்தை அழகு**
**(காகித மலர்)**

**உங்கள் கருணை**
**மழையில் நனையும்**
**கலைஞர் கரங்கள் கோடி**
**பாசவலை வீசுங்கள்**
**(காகித மலர்)**

**கற்பனை உலகில்**
**சிறகு முளைத்த**
**வண்ணப்பறவைகளே**
**மாளிகை முதல்**
**மண் குடிசைவரை**
**அழகு செய்வீரே !**
**(காகித மலர்)**

**கைத்திறன் ஆர்வம்**
**வகைவகை ஆரம்**
**உலக சந்தைகளில்**
**உங்கள் உவகை சிரிப்புகள்**


நீங்க இந்தியா பாட்டுதானே ரசிப்பீங்க!

பெண்களுக்கு சுதந்திரமும் வேண்டும். நல்ல கட்டுப்பாடும் வேண்டும். அதனை மறந்துவிடும் குடும்பங்களை துயரங்கள் கோடு போட்டுவிடும்.

திஷான் கண்ணாடி கூடத்தில் இருந்து பார்த்தான் அநுராதபுரம் தெருச்சந்தியில் ஆயிரக்கணக்கான கைவினை மலர்கள்.

முயற்சி, திறன், கற்பனை ஆற்றல் என பூத்துக்கிடந்தன.

வசந்தம் இல்லாத நாட்களிலும் வண்ணமாக மிளிரும் காட்சி மலர்கள் இன்றைய மின்சார பூக்களின் தோழிகள்.



# 12. திருக்கொன்றை

**உனக்கு நீயே காந்தி**
**உனக்கு நீயே மண்டேலா**
**உரிமைப்போர் தொடுக்க ஒன்றுபடு !**

கவிஞர். தானா. மருதமுத்து

ஆண்களுக்குப் பெண் சரிநிகர்! பாரதி சொன்னதை புதுமைப் பெண்கள் நிருபித்து வருகிறார்கள் சாதனை படைத்து வருகிறார்கள். தீபா சொன்னாள் லுக்ஷியா பிரியாங்கா வருகிறாள் அவளுக்கு உங்க ஊரைப் பார்க்கவேணடுமாம்.

அதற்கென்ன அம்மாவிடம் சொல்கிறேன். என்றவள் காரில் வந்து இறங்கினாள். அவளுக்கு எப்படி இவ்வளவு செல்வம் கிடைத்தது. மாமா அவுஸ்திரேலியாவில், அக்கா கனடாவில், சித்தி லண்டனில், என்று மிக சர்வ சாதாரணமாகக்கூறும் குடும்பங்கள் செட்டிப்பாளையத்தில் நிறையவே இருப்பதால் அவளுக்கு மகிழ் ஊர்ந்து வசதி வந்தது.

தீபா நீ ஜீப்பை எடு, திறப்யை அவனிடம் கொடுத்தாள்.

தீபா திறப்பை வாங்கி பிரியங்காவிடம் கொடுத்தான். லுக்ஷியா, பூமிதா இருவரும் பின் இருக்கையில் அமர, தீபன் முன் இருக்கையில் அமர்ந்தான். பிரியங்கா வண்டியை பிரதான வீதியில் ஓடவிட்டாள். அமல்ராஜ் கையசைத்து விடைபெற்று பல்கலைக்கழக விடுதிக்கு செல்லத் தொடங்கினான். மலை நாட்டில் மிக மெதுவாக வாகனம் செலுத்தவேண்டும்.

ஏற்றம், இறக்கம், வளைவு இவை மிகசிக்கலான அமைப்பாகும். இங்கோ வண்டி வேகமாகச் செலுத்தவேண்டும். நடந்துசெல்லும் பாதசாரிகளும் அதிகம், வீதியில் செல்லும் வாகனங்களும் அதிகம். செட்டிப்பாளையும் பற்றி எதையாவது சொல்லேன் லுக்ஷிகா.

பழுகாமம் மன்னர் திசை வீரசிங்கம் நகைத்தொழில் தெரிந்தவர்களை இந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியமர்த்தினார். ஏன்? கதிரை வெளியில் அரண்மனை அமைத்த குலத்துங்க சோழனும் செட்டிமாரை புளியந் தீவிலும் குடியமர்த்தியதாக கூறுவார்கள் பூமிதா கூறினாள்.

எப்படியோ செட்டித்தெருவானாலும் தட்டாரதெருவானாலும் இந்தியாவில் சென்று நகைத்தொழில் கற்றவர்கள்தான் ஆரம்பித்திருப்பார்கள். தீபன் கூறியபடி பிரியங்காவைப் பார்த்தான்.

தங்கள் ஆசாரி குடிகள் பற்றியும், தீபன் பேசுவது அவளுக்கு பெருமையாக இருந்தது.

என்றாலும், இன்று சிங்களவர்களும் முஸ்லீம்களும் ஆசாரி ஆகவிட்டார்கள். பூமிதா சொன்னதும் தீபன் வாய்விட்டுச் சிரித்தான்.

ஆனாலும் மஞ்சாடி, ரசம், துருத்தி, பவுன், கம்பி, செட்டி, சீட்டு, சாப்புசட்டம் என்று தமிழ் சொற்களை அப்படியே கையாளுகிறார்கள் லுக்ஷியா கூறினாள்.

பூமிதா ஒ ! அழியப்போறதா சொன்ன மொழியை அவுங்க காப்பாத்துறாங்க! அது மட்டுமில்ல ஆசாரி சாதியையும் அவுங்கதான் காப்பத்துறாங்க என தீபன் சொன்னதும் அவர்கள் முகம் சிவக்க சிரித்தார்கள்.

பிரியங்கா ஒன்னுக்கும் பயப்படாத ஒன்னை காப்பாத்த அப்புஹாமியும், அப்துல் காதரும் பட்டறையில் இருக்காங்க என்று மொக்கை போட்டர்கள்.

அவர்கள் மட்டக்களப்பில் வள்ளுவர் சிலை, கல்லடியில் சான்டோ சிலை, ஆரயம்பதியில் உலக நாச்சியார் சிலை, தாளங்குடாவில் சரஸ்வதி சிலையும் கடந்து செட்டிப்பாளையம் அடைந்தார்கள்.

திருக்கொன்றை மரங்கள் இராட்டினமாக பூக்களைக் கொத்துகொத்தா பூத்துதோரணம் கட்டி இருந்தன.


மிகப்பெரிய வசதி படைத்த குடும்பங்கள் வாழ்ந்துவரும் பழுகாமத்து அரசுக்கு சொந்தமான பட்டிருப்பு பகுதிக்கு அவர்கள் வந்தபோது லுக்ஷியா சாரதி இருக்கைக்கு வந்தாள்.

பிரியங்கா ஏதோ சொந்த ஊருக்கு போவதுபோல உணர்வை பெற்றால் பெண்கள் அவங்களுக்கு நிகராக தொழில் புரியாவிட்டால் மிகவும் பின்தங்கிவிடுவார்கள் எந்த பிரதேச மக்களும் ஏனைய பிரதேச மக்களுக்கு இணையாக சிந்திக்க தெரியவேண்டும் இல்லா விட்டால் தோல்வி அடைய நேரிடும்

அனுதாபத்தை மூலதனமாக வைத்து ஏதாவது ஒரு சமூகம் முன்னேற நினைக்குமானால் அது போலி முன்னேற்றமாக அமையும்.

முதலில் சாதிகள் ஒழியவேண்டும் என்றபோது ஆசாரிகள் என இருப்பவர்கள் அச்சாதியை அச்சு வச்சி ஊதிகிட்டு இருப்பதாக லுக்ஷியா கூறினாள். தீபன் அதை வெளிப்படையாக பிரியங்காவிடம் விவாதித்துள்ளான்.

பூமிதா சொன்னால் கிறிஸ்தவரான டக்லஸ் இந்து கலாசார அமைச்சர், பௌத்தரான ரட்நாயக்க பதுளை இந்து அமைச்சர், மவுன்டன் பிரபு மக்கள் சிவதொண்டர் நிலையத் தலைவர். அதாவது இலங்கையில் அவர்களே இந்து சமயக் காவலர்கள். அவர்களை அந்தணர் என்றால் சட்டம் தடைச் சொல்லுமா?



# 13. பூவரசு

**பன்னீர் புஸ்பங்களே**
**காதலர் தினத்தில் மட்டும்**
**எத்தனை புன்னகை**
(புஷ்பநேசன் இளங்கேஸ்வரன்)

கடலலை தாலாட்டும் நீர் பரப்பு!

கரையில் மருதப்புரவி வழிப்பட்ட திருத்தலம் ஆண்களும் பெண்களும் நீராட முடியும். ஆனால் பக்குவத்திற்கு முக்கியம். பக்தியும், பயமும் இருப்பதால் கும்மாளமில்லை. கடவுளுக்கு முன்னே பதவிகள் பகட்டில்லை என்பதால் பதவி வாரிசுகள் காணப்படவில்லை. சிலவேளை மேலாடை கழற்றப்பட வேண்டும் என்பதற்காக ஒரு பயமும் அவர்களிடம். தர்மகர்த்தா ஓடி வந்து இலிக்கமாட்டார் என்ற பாடமும் அனுபவமும் அப்படி சிலரை ஆக்கி இருக்கலாம்.

பெண்கள் உடைமாற்றும் அறையிலிருந்து துலாவும், தோழி கீர்த்தனாவும். துலாவின் அம்மாவும் வெளிப்பட்டனர். ஏற்கனவே வெள்ளை வேட்டி, பச்சை சட்டையுடன் தயாராக இருந்த திஷான் அவர்களுடன் பூசைத்தட்டு கடை வீதிக்கு வந்தான்.

எல்லா வகை பக்கதர்களுக்கும் ஒரே வகையான பூசைதட்டுகள். பட்டினவிலை, கிராமவிலை, விடுத்து கோவில் விலையில் கிடைத்தன.

கையில் ஒரு நூலை கட்டிவிட்டு நூறு ரூபா கட்டணமாக பேசும் வியாபாரம் அங்கில்லை. விபூதி, சந்தனக்கட்டைகளில் செல்வச்சந்நிதி பெயர் பொறித்து விற்கும் தந்திரமும் அங்கில்லை. நான்கு பேரும் நான்கு கடைகளில் தட்டுகளை வாங்கிக்கொண்டனர்.

துலாவின் அம்மா தமிழ் பேசும்போதே சிங்களப்பெண் என்று விளங்கி கொண்டதும் “தெசியா” என யாழ்ப்பாண சிங்களத்தில் பெண் விலை சொன்னாள். சிலர் பேசிப் பார்கிறார்கள். சிலர் பேசவே விடமாட்டார்கள். அங்குதான் குரோதம் கருக்கட்டுகிறது.

தமது வாழ்வாதாரத்திற்கு கல்வியை வித்தாக்கிய பக்தர்கள் அமைதியாக, அக்கூட்டத்தில் கலாநிதிகள், நிர்வாக அதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள், மேல்சட்டை கழற்றி நிற்கின்றார்கள். திஷான் துலாவிடம் கூறினான்.

கடவுள் பக்தியில் ஒரு இறுக்கம், கட்டுப்பாடு, முப்பது வருட யுத்தத்திலிருந்து தங்களை கடவுள் காப்பாற்றிவிட்டதாகக்கருதும் மக்கள். வெற்றி என்பது மனிதனுக்கு அல்ல கடவுளுக்கே என சொல்வார்கள்.

தோல்வியடைந்த குடும்பங்கள் தமது பிள்ளைகள் இல்லா ஊரிலிருந்து நாடு விட்டு, கண்டம் விட்டு போய்விட்டார்கள். கடவுள் காப்பாற்றி விட்டதாகக் கருதும் மக்கள் வெற்றி மனிதனுக்கு அல்ல, கடவுளை எவரும் வெற்றிகொள்ளவில்லை என சபதம் செய்கிறார்கள்.

மனதில் உறுதி! இருபக்க மூளை உறுதி! செயல்களில் உறுதி! விடய ஞானத்தில் உறுதி! அறிவுசார் பயணத்தில் உறுதி! எனப்படும்போது வீழ்த்தப்படக்கூடிய சமூகமல்ல வாழ்த்த வேண்டிய சமுகமாக தம்மை அடையாளப்படுத்துகிறார்கள்.

படிக்காத தலைமைகள். அந்நிய சக்திகளுக்கு அடிமை பெற்ற கட்சிகள் விலைபேசின. உலக முதலாளித்துவ சக்திகளின் வழிகாட்டல் மூலம் கண்களில் வெண்ணையயும் சுண்ணாம்பும் வைத்தார்கள்.

கீர்த்திக்கா திஷானிடம் பேசிக்கொண்டே போனாள். இல்லை என மறுக்க அவனொன்றும் சம்பளம் பெற்று கட்டுரை எழுதும் நிருபரோ. பேராசிரியரோ இல்லை. அவர்கள் பூசை முடித்து கோவில் வலம் வந்தார்கள். பூவரசு மரம் முதுமையிலும் உறுதியாக நம்பிக்கையளித்து. அரசு ஞானத்தை அளித்தாலும் பூவரசு தானே கருவில் சுமக்கும் சுவாசத்தை தரும். திருமண நாளில் பூ அரசின் வாசம் மணமகளின் மூச்சில் கலந்து கருமுட்டையை ஆரோக்கியமடைய செய்யும்.

சிறு தொட்டிகள். குழந்தைத் பாக்கியம் வேண்டிய சிலரும் கிடைத்த மகிழ்வில் சிலரும் பூவரச மரத்தில் கட்டிவைத்திருந்தனர். “துலா” ஆச்சரியப்பட்டாள் வெறும் பூசாரிக்குப் பின்னால் நடந்து செல்லும் ஒரு செம்மறி முகங்களிலிருந்து இந்த அறிவு சார் சமூகம் எப்படி மருத்துவ மூலிகை அறிவை முன் வைக்கிறது எனப் புரிந்து கொண்டாள்.

சிகை காய் அரப்பு மூலம் மினுமினுப்பான உடல் அழகை பெற்ற ஆண்களையும் காணும்போது இவர்கள் மலையாளம் போல இருக்கிறார்கள் என்ற துலாவின் அம்மாவின் ஊகிப்பும், இவர்கள் கேரளா பெண்களை போன்று இருக்கிறார்கள் என துலாவும் நினைத்தார்கள். இணையம் திறக்கும்போது கீர்த்தனா ஓர் ஈரானிய அழகி என ப்பேஷ்புக்கில் ரஹீமும் எழுதியதெல்லாம் உண்மைகளின் உரசல்கள் தான்.

உறவுகள் என்பது என்ன? அது இறைவன் தந்த வரம் என மத வாதிகள் உபதேசம் செய்வர்கள். உறவு என்பது நட்பின் வளர்ச்சிப்படியென பகுத்தறிவாளர் உரைப்பர். துலாவும் திஷான் இருவரும் விண்மீன்கள் தமக்கு தந்த துணைகள் என எண்ணிக்கை கொள்வர்.

எனக்கு ஒரு தொட்டில் எடுத்து தா நானும் கட்டுகிறேன் என்றாள்.

ஐயோ! விஷ்ணு தெய்யோ! துர்க்கா தெய்யோ! என பெயர் வைக்க நீ உடன்படுவதாக அமையாதா?

இன்று கூட விஷ்ணு துர்கா என்று எத்தனையோ சிங்கள குழந்தைகள் பிறந்திருக்கிறார்கள்.

“தொட்டில் கட்டுடா”! அவள் கேட்ட முதல் கெஞ்சுதலை அவன் நிறைவேற்ற இசைந்தான். சற்று நேரத்தில் அவர்கள் இருவரும் பூவரசு தொட்டிலை ஆட்டிவிட்டு அந்த குளிர் நிழலில் அமர்ந்தார்கள்.

பூவரசு இருக்கிறதே அது காலையில் வெள்ளையாக மலர்ந்து மாலையில் சிவப்பாக மாறிக்கொள்ளும். அது எப்போது தன் நிறம் மாறியது என்பதை அறிந்துகொள்வதில்லை.

பெண்களும் வெள்ளை மலராக இருந்து எப்போது சிவப்பு மலராக மாறினார்கள் கண்டுபிடிக்க நாடித்துடிப்பை கணக்கிடும் அனுபவசாலிகள் தேவைப்படுகின்றார்கள். மலையகப் பெண்கள் எப்போதுமே பூவரசம்பூவாக இருக்க வேண்டுமென்பது மண்ணின் கோரிக்கையாகும்.



# 14. அனிச்ச மலர்

My Girl Friend is Softer then the
Anicham Flower

(Thirukural)

அப்புத்தளையிலிருந்து கொழும்பு நோக்கி இரும்புப்பாதையில் பயணம் சென்ற மெனிக்கே சுரங்கங்களில் நுழைந்து "ஒஹிய" ஸ்டேசனில் ஒய்யாரமாய் நின்றாள். மூன்றாம் வகுப்பு பெட்டியிலிருந்து சரியாக பன்னிரெண்டு ஐந்துக்கு இறங்கிய வாசு சுவர்போலமைந்த பாதையில் ஏறிச் சென்றான்.

ஏற்றம் என்பது எப்படி இருக்கும். இந்த பகற் பொழுதிலும் மேகம் மூடி, சாரல் பொழிந்து, குளிர் நடுக்கம் அந்த ஊவா முகட்டைத் தொட்டது. தொப்பி போட்டவர்களும், முண்டாசு கட்டியவர்களும் கம்பளி சுவீட்டர், ஜேர்கின் போட்டவர்களும் மலையோரம் வீசும் காற்றின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் நடுங்கினார்கள். மெனிக்கே ஊதல் செய்து ஓடிச்சென்ற போதும் ஊதல் காற்றின் ஊ! ஊ! சத்தம் செவிப்பறையில் மோதி ஊசி குத்தியது.

கிழவர் குமரன், படித்தவன், படித்துக்கொண்டிருப்பவன், வாயில் புகை வந்தது. புகைத்தல் தடை செய்யப்பட்டது என தத்துவம் பேச எவருமில்லை. சுருட்டு புகை நாற்றம்தான். நெஞ்சை சளி கவ்வாமலிருக்க கிழவருக்கு அது தேவைப்பட்டது. சிகரட் புற்றுநோயின் எச்சரிக்கை விளக்கை எரிக்கச் செய்கிறதுதான்.

இப்போது சாவதைவிட எப்போதோ சாக முடிவெடுத்த பட்டதாரி தங்க இலையை உறிஞ்சினான். அது நெருங்கி வரும் சித்திரகுப்தனுக்கு மலர் செண்டு கொடுப்பதாக அமைந்தது.

பெண்கள் வெற்றிலை, பாக்கு, புகையிலை சேர்த்து மென்று சூடாக்கினார்கள். மூச்சுக்குழாயை சூடாக்கிக் கொள்ளும் தந்திரம் அதுவெனச்சொல்லலாம்.

மூக்கு வடியும் எட்டு வயது எவருக்கும் அச்சம் கொள்ளாமல் சாரத்தை கழற்றி தலை முதல் முக்காடு போட்டான். அந்த குளிர்தான் அவனை ஒத்த சிறுவர்களை “ஆஸ்துமா” நோயாளியாக கண்ணை வெளியே பிதுக்கி வைத்திருக்கிறது.

இவர்கள் படிக்கமாட்டார்கள் என்று கூறும் மதியாபரணங்களும், அவர்களுக்கு படிப்பு சொல்லிக்கொடுக்க முடியாமல் தொழிலை விட்டுப்போன நந்தாவதிகளும் இருக்கிறார்கள்.

இவர்களின் வாழ்வு மலைச்சிறை வாழ்வு என்பதை நிதர்சனமாக எழுதிட முடியாமல் இருக்கும் நிர்வாகசேவைப்பேனைகள் கஷ்டப்பகுதி என வகுத்துக்கொண்டு இருப்பதால் வெளிச்சம் வந்து விடட்டதாகவோ குளிர் நீங்கி விட்டதாகவோ பிரதிபலிப்பை திரையில் காட்டமுடியாது.

வாசு நடந்தான். அவன் சுருட்டும் இல்லாமல் சிகரட்டும் இல்லாமல் நடப்பதைக் கண்டு ஒருத்தன் தங்க இலையை நீட்டினான்.
இல்லை வேண்டாம்! என்றான்.

மூன்று கிலோ மீற்றர் ஏறும்போது தோலில் தொங்கும் பைகளுடன் சில பெரிய பாடசாலை மாணவர்களைப் போன்றவர்கள் பாதை அருகில் சாய்ந்து வளைந்த கிறிஸ்து நாதர் மரக்கிளையில் அமர்ந்து " பீர்" குடித்தார்கள்.

கிரிக்கெட் மைதானத்தில் சீமாட்டிப் பெண்கள் பீர் குடிப்பார்கள். அவர்களே வந்து மலையில் இருக்கும் தொழிலாளி குடிப்பதாக புள்ளிவிபரத்தை வெளியிடுவார்கள்.

ஒரு நாள் வாசுவிடம் சித்தாரா கேட்டாள்.
சிகரெட் பழக்கம் இருக்கா?

இல்லை ஏன்.... யாராவது சொன்னார்களா?
அப்படி ஒன்றும் இல்லை. சிகரட் வாசணை எனக்கு பிடிக்கும். எங்க அப்பா டைவர்தானே.

அவரும், நண்பர்களும் சேர்ந்து இரண்டு பெக்கட் வரை குடிப்பார்கள். ஒரே குதூகலத்துடன் அரசியல் பேசுவார்கள்
அதனால்... என்ன?

முக்கிய அமைச்சர்கள் திட்டு வாங்குவார்கள்.

பிறகு...?

எனக்கும் அந்த சிகரட் வாசம் பிடிக்கும் ஆம்பளையாய் இருந்தால் அழகாக ஊதி வட்டம் விடுவேன்.
சித்தாரா சொன்னதும் அவன் சிரித்தான்.

“எது இல்லையோ, அதனை தேடி ஓடுவது மன அலையின் வேலை!”

ஆ! ஊ! ஏழு பாகை வெப்பத்தில் கைகளை இருக்கி கட்டி மென்மையான நெஞ்சத்தை தற்காத்துக்கொண்டாள் ஒரு யுவதி.

ஒஹிய ஏற்றத்தில் தலையில் சுமையுடன் உழைப்பவர் நடக்க உலக முடிவை தரிசிக்க நினைத்த ஒரு காதலர்சோடி குளிர் தாங்காமல் ஒரு மழைப்போர்வைக்குள் இருவரும் நுழைந்து நடந்தனர். அது புது அனுபவம்.

ஏழு கிலோ மீற்றர் ஏறிச் சென்றதும் சப்ரகமுவ போகும் பாதை தொட்டது. பல்கலைக்கழக மாணவர் குழுக்கள் ஒரு பால் வெளியில் உச்சி நோக்கி நடக்கத்தொடங்கினார்கள். சந்தியிலிருந்து கீழ்த்திசை நோக்கிய தோட்டப்பாதையில் தொழிலாளர்கள் பிரிந்தார்கள் - நடந்தார்கள்.

அதோ! அனிச்ச மலர் அதனை தடவிப்பார்தான் வாசு.

“நன்னீரை வாழி அனிச்சமே நின்னிலும்
மென்னிரள் யாம் வீழ்பவன்”

“வள்ளுவம் நினைவில் வந்தது. “அனிச்சமலரின் காதல்” என நாவல் எழுதப்பட்டதாகவும் அவன் அறிந்திருந்தான். அவனுக்குள் சித்தாரா ஓர் அனிச்சமலர் ஒஹிய தோட்டத்தை அடைந்த போது மூடி சீரழிந்த தேயிலை தொழிற்சாலை தலையில் கல்லை சுமக்கும் தகர லயன்கள்.

மண்சரிவில் சிக்கிய குடியிருப்புகள். ஓராயிரம் தொழிலாளியை புதைத்து நின்ற தோட்ட மயானம் அவன் கண்களில் பட்டன. இந்த குளிர்வீசும் மரச்சோலையே இன்னும் எத்தனை பேரே ஏப்பம் விடுவாய்?

மண்மேடு சரிந்து வருவதாக செய்தி பரவியதும் வவுனியாவிலிருந்து நிவாரணம் கொண்டுவந்த வாசு குழுவினர் ஒரு வாரமாய் ஒஹிய தோட்டத்தில் முகாம் அமைத்தனர். குளிரால் வாடும் குழந்தைகளையும் தேயிலைக்கு உழைத்து ஓடாய் தேய்ந்த முதியவர்களையும் கண்டு அவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல வந்தான். சுவர் வெடிப்புகள், வீடுகள் தரைக்குள் புதையும் அவலம், கடவுளின் தண்டனை எனக்குமுறும் சுரண்டப்பட்ட வர்க்கம். இவர்களுக்கு சரியான வழிகாட்டுபவர் யார்?

அடுத்த தலைமுறையின் அரிச்சுவடிகளான ஹக்கி , டிலூ, ரிஷிதா, பவின், தாத்தா முருதை அப்புத்தா பொம்மி அறுவரோடு வாசு பங்கட்டி வர புறப்பட்டான். தாத்தா பிறந்த மண்ணை ஒரு பிடி எடுத்துக்கொண்டு நடந்தார்.

அப்ப அப்பா, அம்மா எல்லாம்? பவின் கேட்டான் பூமாதேவி புதைக்க போறதா சொன்னா என்ன செய்வோம்?
இருநூறு வருஷம் தோட்டத்தை பிரிய முடியாமல் ஆராயி!
சொல்வதிலும் தர்மம் இருந்தது.

ஆராயி மட்டுமல்ல அங்குள்ள ஆயிரமாயிரம் அனிச்சமலர்களும் இன்று மட்டும் சிரிக்கின்றன.

# 15. நாகலிங்க மலர்

**யாகம் மடைதிறந்து**
**தேசம் புகழ்பெற்று**
**தேவன் அமர்ந்த மலர்**
**நீயே!**

**உளமே உனக்கு**
**உருவானது உளச்சிறையே**

கவிஞர். கே.எஸ். பாலசந்திரன்
(அப்புத்தளை)

ஹாய் சித்தாரா! நான் நெந்தா

ஓ...அன்ரீ
எப்படி துலா நலமா?

ஒவ்! அவ வங்கியில் பயிலுநராகபோய் வருகிறாள்...

அது! சரி...வாசு சுகமா?

ஓ! அன்ரீ உங்களுக்கும் சொல்லிவிட்டாங்களா?

அதுக்கென்ன புள்ள ! மனசுக்குப் பிடித்தது தானே வாழ்க்கை! அந்த நந்தவனத்தில்தானே சுகமான சுவாசம் கிடைக்கும்.

இல்ல அன்ரீ... உங்களுக்கும் துலாவுக்கெல்லாம் இப்பவே தெரியவேண்டாம் என நினைத்தேன்.

அப்ப...எங்கள சற்று தூரமிருந்து வேடிக்கை பார்க்கச் சொல்லுவீங்களா? இல்ல...எங்க மகளுக்கு நீங்கசெய்த உதவிக்கு கடன்பாக்கி கொட்டிக்கிடக்கிறதே!

தொழிலாளி....
கண்ணாம்பூச்சி
விளையாட்டு...
ஒழிந்திருப்பது
தேயிலை மலை!

தொழிலாளியின்
வியர்வை உப்பை
சுவைக்க மறந்த செடிகள்
விறகாக ஏற்றப்பட்டிருக்கின்றன!
ஏற்றுமதி சந்தைகளில்
முத்திரையை பறிகொடுத்து
முச்சந்தி வீதியில்
கடைகளும், வீடுகளும்
முழ்கடித்து

கூடைகள் செல்லறித்துப்
போயின
கவ்வாத்து கத்திகள்
கறல் பிடித்து மங்கின.

ஏழுமலை தங்கமலையில்
கொம்புத்தேன்
தேடிஅலைகின்றாள்!

மீண்டும் பின்நோக்கிய வாழ்க்கைப் போராட்டம்
ஓ! அந்த கவிதையை அப்படியே ஆங்கிலத்தில்

*Tea bushes*
*In up country*
*Is as*
*Blind man's Buff*

*The Tea bushes*
*Which forgot to*
*Taste the sald*
*of the sucide of the labour*
*Transport as*
*Firewood*

*Tea lost it's*
*Quality at the*
*Export market*
*And came*
*To the Junction*

*First class tea bushes*
*Vanished and*
*New buildings*
*Cropped up*

*Came basked were*
*Froded by termites*
*And the pruning*
*Knives were*
*Filled with rust*


*Al malai is going*
*In search of*
*Honey thangamalai*
*(means the mountain contains Gold)*
*Now there is struggle*
*Because of Backwardness...*

சொன்னால் எப்படி இருக்கும்

நாங்கள் தேயிலை மாந்தரை ஏதோ சாதாரண சம்பளம் வாங்கும் மனிதர் கூட்டமாக நினைத்துக் கொண்டோம்!

சிக்காக்கோவில் சுதந்திர சிலை எழுப்பியவர்களும், பிற்ஸ்பேர்க் இரும்புத் தொழிற்சாலை ஊழியர்களும் இவர்களே என பேசவோ, போற்றவோ இல்லை. இனி அதனைச் செய்ய வாசுவுக்கு துணையாக நான் இருப்பேன். நந்தாவதி ஆங்கில ஆசிரியை ஸ்கைப் தொடர்பைத் துண்டித்தாள். சித்தாரா தூண்டிய மனத்திரி எரிந்துகொண்டே இருந்தது.

நாகலிங்க மலர் மீரியபெத்த மலைச்சாரலில் இருந்தன. திருமால் பள்ளிக்கொள்ளும் மலருக்குள் லிங்கம் இருப்பதாக இணையத்தளம் கூறுகிறது.



# 16. சுவர்ணமலர்

الناس كالأزهار
لا تقطع الأزهار
شم الأزهار
لاحياء العالم

(பீடாதிபதி அரபுக்கல்லூரி - தியத்தலாவ)

சிவங்கலிங்க பூசை செய்ய வைதேகி காத்திருந்தாள். அவள் சிவபூசை செய்ய சுவர்ணமலர்கள் தேவை. தாம் குடியிருந்த கோவிலின் விரதம் நிறைவேற சத்தியபாலகர்கள் மலை, நதி, கடந்து நாகம் காத்துவரும் மலர்களை எடுத்துவரச் சென்றனர்.

ரஞ்சனி முகாமையாளர் மடியில் தலை வைத்து கதை கேட்டுக்கொண்டிருந்த பிரியங்கா ஒரு சுகத்தை அனுபவித்தாள். தனது தாகத்துக்கு அவன் சுவர்ணமலர் தருவானா?

பிரியங்கா குடும்பம் நகரசபையாக விளங்கும் பண்டாரவளவு பட்டணத்தின் மலைசரிவு குடியிருப்பு பகுதியில் அமைந்த சிறு மாளிகையில் வாழ்ந்துக்கொண்டிருந்தது. அந்தத்தெரு ஆசாரி தெருவென பெயர் எழுதி ஒட்டி இருப்பதால் நகை வெள்ளி, அலங்கார பொருட்கள் விற்பனையில் ஊறிப்போன பல குடும்பங்கள் அந்த புறஞ்சேரி பகுதியில் வாழ்ந்து வந்தனர்.

அம்மா நம் சொந்தக்காரர்கள் எங்கம்மா இருக்காங்க? பெருமை பேசுவதில் நாம் சனங்களுக்கு குறை எங்கே இருக்கிறது? கொழும்பில் செட்டிதெரு, யாழ்ப்பணத்தில் தட்டாரத்தெரு, மட்டகளப்பில் செட்டிப்பாளையம், எங்குமே நம்ம ஆசாரிக் குடும்பம்தான் சிறப்பாக இருப்பாங்க.

மந்திரம் படித்தவர் வேதம் ஓதவும் ஏர் பிடித்தவன் தானியம் விளைவிக்கவும், குலோதுங்க சோழனால் பழக்கப்பட்ட காலத்தில் தேர் அமைக்கவும் குதிரை வண்டி அமைக்கவும், தெரிந்தவர்களை ஆசாரி என்றனர். அவர்களே இன்று எஞ்ஜினியர் என சொல்லப்படும் பதவிப் பெயருக்கு முன்னோடிகள். இரும்பு, தங்கம், வெள்ளி, உருக்கி முறையே வாள், ஈட்டி, கலப்பை, நகை, பாத்திரங்கள், கலசம் செய்யும் நிபுணர்கள்.

இந்த ஆசாரிமார்கள் அனைத்து மக்களுடனும் உறவுகளைப் பேணுவார்கள். உலக நடப்புகளை மிக அதிகமாக அறிந்திருப்பவர்கள். சிறுவர்களாக இருக்கும்போதே பட்டரை எனப்படும் தொழிற்சாலைக்கு வரும் இவர்களுக்குள் நெருப்பில் தங்கத்தை வைத்து உருக்கி தட்டி ஊதி நீரில் இட்டு நெருப்பில் சுட்டு எடுக்கவும், திறமை வளர்ந்து விடும் தனிபெருமை உள்ளது.

நூலில் மலர் கோர்ப்பதைப்போல தங்கத்தட்டுகளை அச்சில் அடுக்கி நெருப்பால் ஒட்டி வைப்பார்கள்.

இந்த தமிழ் கலைஞர்களை சுவர்ணமலர் ஆக்குபவர்களை கண்டி தமிழ் மன்னர்கள் மதுரையிலிருந்து வரவழைத்து வந்தார்கள்.

“போர்வாள் கேடயம்
பெண்டிர் நெஞ்சில் மனச்சரடு

மண்தண்டாவளை அம்மன் கண்ணடக்கம்

செய்ய வந்த மதுரை சுவர்ணப் பிறவிகள்”

என கண்டிச்சீமை அரசவை கவிஞன் "பட்டவர் முனி பாடி இருக்க கூடிய பாடலை தேடாமல் விட்டது எம் தவறு" என சற்குணநாதர் சொல்லிக்காட்டுவதை ட்யூட்டரில் பார்த்து "பிரிஞ்" உங்க குடும்பத்தை பற்றி ஒரு செய்தி என தீபரட்சன் அனுப்பிய செய்தியை பாரத்து தனது அம்மா மடியில் படுத்தாள் பிரியங்கா.

மலையக தொழிலாளருக்கு என உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டுறவுக்கழத்தின் முகாமையாளர் இவள் நேரடியாக தோட்டம் ஒன்றுக்குச் சென்று தொழிலாளர் சம்பள காசோலையைப் பெற்று வங்கியில் வைப்புச்செய்யும் பணியை கழகம் செய்யும். அதனால் இருநூறு வருட கூலிபெறும் முறை ஒழித்து, பெருவிரல் அடையாளம் இடும் கைநாட்டு ஒழித்து, தொழிலாளி மாதாந்தம் ஆயிரம் ரூபாவை சமூக நிதிக்காக வழங்கும் நிலை உருவாகியது. மலையகத்தில் கட்டாய சேமிப்பும் உருவானது.

எவர் தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தை அமைத்தார்?
ஏன் நம்ம மாகாண சபை காரங்கத்தான்?
இல்லை !

அப்ப நிதி அமைச்சர் கொழும்பிலிருந்து, இல்லை!

அப்ப எப்படி ஒருஅமைப்பு வந்து சம்பளத்தைக் கேட்டு வாங்கும்?
தோட்டங்களில் கோவில் கமிட்டி,மரணகமிட்டி, எனமுற்காலத்தில் இருந்திச்சி

அது! ஆனா பட்டாதாரி இளைஞர்கள் ஒவ்வொரு தோட்டத்திலும் வளர்ந்தாங்க எல்லா கமிட்டியும் கலைக்கப்பட்டன.

ஒரு கூட்டுறவுசங்கம் இருவது தோட்டங்களை இணைத்து உருவாக்கினார்கள்.

ஒருமேளமும் ஒருதாளம் அடிக்க ஆடி பூசைக்கு ஒரு இலட்சம் ரூபா தேவைப்பட்டது. இப்போ?

காசு இல்லாமல் கூட்டுறவு சங்கம் வழங்குகிறது நாட்டியம், கிராமிய கலைகள் எல்லாம் இலவசம்! அதனால் சில கலைஞர்கள் மறுபிறவி எடுத்து பிறந்த மாதிரி காப்பாற்றப்படுகிறார்கள்.

உறுப்பினர்களுக்கு என்னலாபம்?

ஒரு உறுப்பினர் இறந்தால் - கூட்டுறவு சங்கம் பேழை வழங்கும் அத்துடன் எரிமனை வரை காரில் தொழிலாளியின் பூத உடல் எடுத்துச்சென்று ஒரு நாகரீக முறையில் இறுதிச் சடங்கு முடிகிறது.

அதனால் என்ன?

சாதி அடிப்படை தொழில்கள் நீக்கப்பட்டுவிட்டன. குடியும் கூச்சலும் அடக்கப்பட்டுவிட்டன.
அது மட்டுமில்ல செத்த வீட்டில் பிடுங்கி தின்னும், சுரண்டி வாழும் ஏமாற்று நாடகம் முடிவுக்கு வந்தது.

தாலியில் பிரிவு வேண்டாமென்று ஒரு வடிவமைப்பு நிபுணத்துவ பட்டதாரி திருமங்களநாண் ஒன்றை உருவாக்கினார். எமது உறுப்பினர்கள்கள் அனைவரும் ஒரே மாதிரி மங்களத்தை சூடிகொள்கிறார்கள்.

சுவரிலிருந்து பல்லி ஒன்று சொல்லிக்காட்டியது.

# 17. காத்திகைப்பூ

**விடியல் தேடி**
**முகிழ்த்த பூக்கள்**
**அடியில் சிவப்புத் துளிகள்..**
**உழைக்கும் வர்க்கத்தின்**
**உரிமையை கோரி ...**

கவிஞர். கோவுஸ்ஸ ராம்ஜீ உலகநாதன்
எல்லை

அம்மா தனது முகப்புத்தகத்தில் சேர்த்திருந்த ஆங்கிலக் கவிதையை துலாஞ்சனி கீர்த்தனாவுக்குக் காட்டினாள்.

வா! அதனை சிங்களத்தில் மொழி பெயர்க்க வேண்டும். தமிழ் கவிஞர்கள் எப்படியான இலக்கியம் வளர்க்கிறார்கள் என சிங்களப் பேராசிரியருக்குத் தெரியாது. தொழிலாளியின் கேள்விக்குறி வாழ்க்கையோட்டம் ஏன் எங்கும் ஒலிப்பதில்லை?

ஒலிக்காமல் கட்டுப்படுத்துகிறார்கள். பேசாமல் அடக்கிவைத்து அடக்கம் செய்கின்றார்கள்.
நாம் துணிந்து எழுதினால், உள்ளூரில் மட்டுமல்ல, வெளியூரிலும் பேசுவாங்கள்.
துலாவின் அம்மா வாசுவின் தமிழ் கவிதையை சிங்களத்தில் மொழி பெயர்த்தாள்.

*මැයි දිනයේ*
*අලංකාර වචන වලින් කතා*
*ස්වර්ගයේ සැපත*
*රැඳී තිබෙන බවට*
*බෙර වාදනය කරනි*
*රන් රේඛා දිවෙන බවට*

*අඩ බෙර ගසනි*
*දවසක නුඹ*
*පරඬැල් වී පෑගෙන විට*
*බඳුන අතට ගෙන*
*රස බලති.....*

இந்த சுரண்டப்பட்ட மனிதர்கள் எப்படி நொந்துபோனார்கள். அவர்களின் அழிவுக்கு காரணமான அரசியல் குரோதம் என்ன ?

கீர்த்தனா ரஹீமிடம் சொன்னாள்! நீ அரபுமொழியில் இது பற்றி எழுதுடா.

ரஹீம் எழுதி ஆப்கானிஸ்தான், லெபனான், சிரியா நாட்டுக்கு அனுப்பினான் அரபுமொழி

உலகமக்கள் எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் அடிமைகளாக பார்க்கப்படுகிறார்கள்.

அதனை உணர்ந்த இளைஞர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தாகள். தலிபான் போராட்டம், தலித் போராட்டம், சீக்கியர் போராட்டம் எல்லாமே செங்கோலை தூக்கி நடப்பதற்காக அல்ல தாங்கள் முதுகில் குத்தும் சப்பாத்துகளை வெட்டி விடுதற்காவே ஆகும்.

கார்த்திகை மலர்கள் சிவப்பாக மலர்ந்து புரட்சியைக் காட்டுகின்றன. கிழங்கில் விஷம் உள்ளதால் மனிதர்கள் எச்சரிக்கையாக இருப்பார்கள். எல்லாக் காலங்களிலும், எல்லா நாடுகளிலும், சிந்தனை புரட்சிகள் நடந்துகொண்டே இருக்கின்றன. பல புரட்சிகள் நசுக்கப்படுகின்றன. சில புரட்சிகள் உலகில் பேசப்படுகின்றன. தேயிலை புரட்சி என்றோ ஒருநாள் உலகின் ஏதோ ஒரு எல்லையில் பேசப்படும் என்பது நிதர்ஷனமாகும்.



# 18. சயனமலர்

**Tea lost its**
**Quality at the**
**Export market**
**And came**
**To the junction**

Paramanathan Sir (Translator)
Bandarawela

புதுமையும், பழைமையும் என்றும் போராடும்.

பழைமை பண்பாட்டினை அறமாகக்கொண்டு காய்களை நகர்த்தும புதுமை பகுத்தறிவைகொண்டு புதிய சிந்தனைகளைக் கையாளும்.

இன்று இளைஞர்கள், யுவதிகள் மூன்று சகாப்பதத்தை முந்தி நடக்கிறார்கள்.

பிரியங்காவின் அம்மா. அவளுக்கு வந்த குறுந்தகவல் ஒன்றைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தாள்.
“உனக்கு எனது பிறந்தநாள் வாழ்த்து ! தீபன் (UK)

யார் அந்த தீபன் என விவாதிக்க தேவையில்லை. பிரியங்காஅவனைப் பற்றியும் அவனது ஆய்வுகள் பற்றியும் ஒருநாள் அவளுடன் விடயப்பகிர்வைச் செய்தாள்.

ஒரு B.sc அவன் தனக்கு ரோஜா செடி தந்ததையும் கூறினாள்.

பந்தை நாம் கையில் வைத்திருப்பதைவிட எதிர்த்திசைக்குக் கொடுத்து ஓட்டங்கள் எடுப்பதில் தான் வெற்றியடைய முடியும்.

அவன் இனி என்னென்னப் படிப்பானோ? எந்தெந்த நாட்டுக்கு போவானோ?

முதலில் வாழ்க்கையில் தங்குகை ஒன்றை அடையட்டும். பிறகு அவன் அம்மாவை என்னைப் பார்க்கச் சொல்லு. அப்பாவுக்கு தெரிகிறமாதிரி நடக்காத. அவர் நாளைக்கே பட்டரை பொடியனை பேசி வைச்சிருவாரு!

அப்போ. அதிர்ச்சி என்ன?

லண்டனில் இப்போ மாலை 7.30 மணி என்று எழுதி இருந்ததான். ஓ! அவன் எப்போ லண்டன் போனான். அதனை ஏன் பிரியங்கா என்னிடம் சொல்லவில்லை! அவர்கள் புதுமை, புதுமை எனக்கூறி கல்யாணத்திற்கு முன்பே விவாகரத்து திகதி குறித்து பேசிக்கொண்டனரா.
தோழமைக்கு, பழைமைவாதிகளாய் இருப்பதைவிட புதுமை நோக்கியத் தேடல் இன்று அவசியமாகிறது.

வேறு ஒருவர் படம் பிடிக்காமல் தன்னைத்தானே (selfie) படம் பிடித்து பிரியங்கா காட்டிய போது நவீனத்துவம் மட்டுமல்ல புதிய தமிழ் சொற்களும் உற்பத்தியாவதை கண்டு கொண்டாள். குறுந்தகவல், தவிப்பு அழை, மீள்நிரப்புகை, பக்கஅமைப்பு, மென்பொருள், தொடுகை, வலை, நேரலை, முகநூல், பதிவேற்றம், இருவட்டு, முப்பரிமாணம் இப்படி எத்தனை தமிழ் கலைச்சொற்கள் கோவையாக்கப்பட்டன.

இந்தமொழி கொஞ்ச நாளில் செத்துப்போகுமென சிலர் கத்தவும் கூடும். அப்துல்கலாம் யாழ்ப்பாணத்திற்கு வந்து மிகச்சிறந்த மாணவியை சந்தித்தேன் எனச்சொன்போதே மேலும் பல நூறு வருடங்கள் தமிழை விஞ்ஞான சாதனைக்கு உரிய மொழியாக புதியவர்கள் கொண்டு செல்வார்கள் என்பதை கல்விச்சாலைகள் தெரிந்து கொண்டன.

இப்பவெல்லாம் யார் எங்கேங்கே போறாங்கனு தெரியல. ஏன்டி பிரிஞ்ச் நாளைக்கு அமெரிக்காவில இருந்து கோலெடுப்பானோ?

இது அம்மா மகள் உறவு இல்லை அக்கா தங்கை உறவுமாதிரி !

நானே! எரிச்சலில் உதறிக்கிட்டு இருக்கிறேன். பிறந்தநாள் பரிசா ஒரு ஐம்பது ரூபா மோதிரமாவது கொடுப்பானு நினைச்சா விமானத்தில் போய் இறங்கி SMS போட்டு தொலைச்சு இருக்கான்.

ஏன்டி, அப்படி!
எனக்கு அதிர்ச்சி கொடுக்குறாராம்.

இந்த காலத்து பொடியன்களின் வேகத்திற்கு நாமதானடி சமாளித்துப் போகனும்.

அட! லண்டன் மாப்பிளங்கிறதும் எப்படி உருகுற பாரு !

அதெல்லாம் ஒன்னுமில்ல! நல்ல இடத்துல பேசுறாங்க! லண்டனுல சித்தி பேசி இருக்கானு உன் அப்பாவை சரிபண்ணிட வாய்ப்பு இப்பதான் வந்திருக்கு.

டேய்! லண்டனில என்னடா செய்யுற?

ஒரு பர்த்டே கேக் கடையில வேல செய்றேன்.

டியூடரில் கேள்விபதில் ஓடிக்கொண்டே இருந்தது.

பிரிஞுச் நட்சத்திரத்தையும், லக்கினத்ததையும் கேளு? வீரசக்தி விநாயகர் கோவிலில் அர்ச்சனை செய்யனும்.

“நான் கன்னி” நீ?
“மீனம்!”
நான் “சித்திரை” நீ!
“ரேவதி”

பிறக்கப் போறது ? சிரித்துக்கொண்டே கேட்டாள்.
அதுவா “மீனரேவதி!”

அப்பவும் எங்க குடும்பத்தில பொண்ணு தானாடா!

நகைகடை சொந்தகாரரே ஆடிப்போனா எப்படி?

ஸ்ரெலிங் பவுண் இருக்கையில ஏன் உங்க மாமா பயப்பிட போரார்? எல்லாம் மருமகன் சுமப்பாருனு தெரியாதா?

கவனம் ஸ்ரெலிங் பவுணை நெருப்பில வைச்சி உருக்கிப்பிடுவாருடா!

# 19. செவ்வரலி

**ஒருதீக்குச்சிதேய்ந்தாற்போல**
**உணர்வுசொறிவது**
**பார்த்தால்**
**பார்வையிலேயேநெஞ்சில்**
**பதியக்கூடிய**
**செவ்வலரிப்பூ**

(கவிமணி நீலாபாலன்)

செவ்வரலி மலர்கள் வசந்த காலத்தை மிக அழகாக இதழ் விரித்து சிரித்தன. அதன் அருகே உயர்ந்து வளர்ந்த சீமைப்பூமரங்கள். மர வரிசையில் நட்டு வைத்த தேன் மலர்கள். காற்றாடி மரங்களின் பூ வாசத்தில் தேன் தேடும் வண்டுகளின் ரீங்காரம். அதனால் அந்த இடத்திற்கு பூ மரத்துச்சந்தி என காரணப் பெயர் வந்தது.

பூ மரத்துச்சந்தியை அடைந்தால் மேற்கே இடைச்சிமலை, கிழக்கே நந்திமலை பள்ளம் நோக்கித் தெரியும். அந்த மலைச்சாரலில் விழும் மழை நீர் தெற்கு நோக்கி ஓடினால் தியலும நீர்வீழ்ச்சியாகவும், வடக்கு நோக்கி ஓடினால் வெள்ளவாய குருவியூர் ஆற்றாகவும் மாறும்.

பிரியங்கா... தனது ஜீப் வண்டியை மணிமேடு என்றும் மலர்ச்சோலை நோக்கி திருப்பினாள். இடையில் கற்றாழை வளர்ந்துள்ள தேவசபை ஆலயம். அதன் எல்லைகளில் பிள்ளையார், முருகன், அம்மன் என ஒன்பது ஆலயங்கள் காணப்படுகின்றன.

தமிழர்கள் தாம் வாழும் பகுதியில் சில அடையாளங்களை அமைத்து சிறப்பிக்கவைக்கும் கலையை கையாண்டு வந்தனர். அநுராதபுரம், தம்புள்ள பகுதிகளிலும் பிள்ளையார் கோவில்கள் காணப்படுகின்றன. தமது கலை, பண்பாடு, ஆன்மீகம் எல்லாவற்றின் உறை வடிவமாக ஆலயத்தை அமைத்தனர். கல்வி வளர வேண்டுமா? ஆலயத்தில் ஏடு தொடங்கினார். வாழ்க்கை ஆரம்ப நாளில் கடவுள் முன் தாலி கட்டினார்கள். அது நீதிமன்றத்திற்கு பிரிவை தேடி போகாத உறவு. கலைகளை வளர்க்க வேண்டுமா? சிற்பம், சித்திரம், இசை, நடனம், பூசை முடித்து வளர்க்குமிடமாக மாற்றினார்கள்.

மணிமேடு நீர்வளம் உள்ள பளிங்குப்பாறை மலையாகக் காணப்பட்டது. அங்கே இருந்து பார்த்தால் மேகம் தவழும் மலைகள், மலைக்கோயில், பசுமை புல்வெளி, வேழும், முதிரை, பலா மரங்கள் வளர்ந்த காடுகள். எதிரே ஈரான் நாட்டு நீர் கொடுக்கும் சுரங்க பாதையின் முடிவுக்கரை. அந்த வெளியில் பச்சை நிறக் கூடாரங்களில் வளரும் கானேசன் மலர்ச்செடிகள் நான்கு பிரிவுகளாக வளர்க்கப்பட்டு வந்தன.

மலர் அறுவடைக்குத் தயாரான கூடாரம், மலர் இருக்கும் கன்னித் தாவரம், நாற்றுத் தாவரம், புதியத்தாவர உற்பத்தி செய்ய தாயாரான தவரணையில் ஆயிரக்கணக்கில் அடுக்கப்பட்டு, கயிறு கூடாரம் ஒன்றில் நீர் சொட்ட, சொட்ட தளிர் விரிக்கும் பயிர்த்தாவரம். அவை மறு நடுகைக்காக விலைக் கொடுத்தும் வாங்கிச் செல்ல வண்டிகளில் ஏற்றப்பட்டுக்கொண்டிருந்தன.

அழகு இளம் பெண்கள் தலைக் கவசம், கையுறை, ரெக்கிட் அணிந்து மலர்த்தோட்டத்தில் வேலை செய்தனர். அவர்களின் தொடுகைப் போன்களுக்கு குறுந்தகவல் மூலம் வேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அவர்களிடம் நாகரீகமும், நளினமும் காணப்பட்டது.

மலர்களை ஏற்றிச் செல்ல பிரியங்காவின் ஜீப் தயாரானது. தீபன் கொடுத்த மலர் ஏற்றுமதி ஆணையை நிறைவேற்ற வேண்டும். ஆயிரம் கானேசன் மொட்டுகள் மணிமேட்டிலிருந்தும், ஆயிரம் ரோஜா மொட்டுகள் அப்புத்தளை பச்சைமலை உச்சியிலிருந்தும், ஆயிரம் அந்தூரியம் மலர்கள் கட்டவாழை சந்தியிலிருந்தும், இன்று வந்தடைய வேண்டும். அவற்றை கொழும்புக்கு அனுப்பி விமான பயணத்தில் மலர்கள் லண்டனைச் சென்றடையும். தீபன் வடிவமைத்த வர்த்தக மலர்ச்செய்கை கைத்தொழில் மேம்பாட்டு விருத்தி பெற்றுள்ளதாக நினைத்து பிரியங்கா மனதுக்குள் நெகிழ்ந்தாள்.

எதையும் எவரிடமாவது கேட்டுச் செய்யவேண்டும். என்ற பழைய மொழியை புதிய தலைமுறை மாற்றி விட்டனர். அனுபவசாலிகளின் உபதேச புராணங்கள் நீண்டுகொண்டே போகும். பிறகு நாய் கடலுக்குச் சென்று நீர் குடித்த மாதிரி முடிப்பார்கள். இளையோருக்கு விஞ்ஞான செயன்முறை தேவை. அவர்கள் இணைத்தளம் மூலம் மலேசியாவிலிருந்து சவுதிக்கு பளிங்கு கற்களை ஏற்றுமதி செய்வார்கள். அவர்களிடம் இருபக்க தொடர்பாடல் ஓங்கி வளர்ந்துள்ளது. அதனால், நேர்மையான வர்த்தகத்தில் அவர்கள் முன்னிலைப் பெறுகிறார்கள்.


நாம் ஓர் தொழில் செய்யும்போது அங்கே உரிமைகள் கிடைக்க வேண்டும். கௌரவம் பேணப்பட வேண்டும். சுரண்டல் காணக்கிடைக்காத நிலை ஏற்பட வேண்டும். அதனை தேயிலை மாந்தரின் பேரப்பிள்ளைகள் தேடிப் பெற்றுக்கொண்டார்கள்.

தொழில் தருனர், தொழில் கொள்வோரை திட்டுவதையும், அவமானத்ததையும், துன்புறுத்துவதையும், ஏமாற்றுவதையும் தொழிலாளர் அடக்கு முறையென வெள்ளையன் எழுதிவைத்துச் சென்றதை இன்னும் எவ்வளவு காலம்தான் தாங்குவது என ஐந்தாம் தலைமுறை சிந்தித்து ஆறாம் தலைமுறைக்கு விடுவைத் தேடித்தந்தது.

ஏன்? ஏன் அப்படி? என கேள்வி கேட்கலாம்.
“நான் சொல்வதைச் செய்” என்ற துரைத்தனம் ஜனநாயகத்தை விழுங்கும் மலைப்பாம்பாக தெரிந்து விடும்.

மனிதன் மரியாதையை மறக்கும்போது மிருகமாகிறான். மிருககுட்டி வாழ்க்கை சுகமானதாக இருக்கலாம். ஆனால் பெயர் சொல்லி வாழ முடியாத வாழ்க்கையாக முடித்து விடும் என “மங்கப்பன்” சொல்லியிருக்கிறார்.

வாழ்க்கை என்பது சோலைதான். அங்கு மலர் வளர்க்கப்படும்போது இனிமையும், மகிழ்ச்சியும் தழைக்கிறது. அதுவே காடாகி விட்டால் மனிதருக்கு எங்கே இடமிருக்கும்?. தீபன் நேற்று தனது முகப்புத்தகத்தில் எழுதி இருந்த வரிகளை பார்த்து உழைக்கும் மக்களைத் தேடினாள் பிரியங்கா அவர்கள் விட்டில்களாக ஏன் சுரண்டும் கரங்களில் விழுந்துகிடக்கிறார்கள்? விடைத்தேடிய ஆயிரம் இளைஞர்கள், விடைகளைக் கண்டு இந்த மண்ணை சுதந்திர பூமியாக அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



# 20. குறிஞ்சி

හැංගි මුත්තං සෙල්ලම...
සැඟවී තිබෙන්නේ
තේ වතු, කඳු
කම්කරුවන්ගේ දහඩිය ලුණු
රස විඳීමට අමතක කල
තේ පඳුරු
දර ලෙසට පැටවෙනවා......

අපනයන වෙළෙඳ පොලේ
තම කීර්තිය ගිලිහෙන්නට හැර
තුංමංහංදි වීදිවල
කඩ සාප්පු, ගෙවල් බිහිවීමෙන්
දළු කුඩ බිඳී ගියා
කොකු පිහි මොටවුනා
මට්ටම් ලියද බිඳුනා....

ආනන්දන් මහතා
පොලිස් පුහුණු මධ්‍යස්ථානය, මහියංගනය

விடியும் நேரம்.

ராமர் பஜனை வீட்டுவாசலில் சங்கு ஊதும் ஓசையும் கேட்டது.

“ராமன் சீதையை தேடி வனத்தில் அலைந்தாரே” பெயர் சொல்லாத கவிஞன் 'எழுதிய பாடல்.. ஒரு தேயிலைப்பாடகன் பாடிவந்தான்.

ஒரு விஸ்வநாதன் டொல்கி அடித்து இசையமைத்தான்... பஜனைக் குழு .. சித்தாரா வீடு வரை வந்தது. அவள் கம்ப விளக்குக்கு எண்ணெய் விட்டாள்.

ராமர் கால்களில் பணிந்து எழுந்தாள்.

அவள் வாசலில் ..... செவ்வந்தி பூக்களில் கோலமிட்டிருந்தாள்.

மல்லிகை மலர்களில் மாலைக் கட்டியிருந்தாள். பறங்கி பூவை பிள்ளையார் முன் வைத்திருந்தாள்.

'இன்று அவளது மாமாவின் வழக்கு” கஸ்டங்கள் வரும் போது எல்லா தெய்வங்களையும் தேடும் மனித மனசு.

சித்தாரா இராமனை தேடினாள். வாசுவுக்கு அவள் சீதை' வாசுவின் அப்பா தசரதன்'

நீதி மன்றத்தில் 'தசரதன்'' கூண்டிலிருந்து இறங்கி வந்தான். அவனுக்காக வாதாடிய சட்டத்தரணி இதழ்கஸ்ஹின்ன அனுஜன் திஷானின் நண்பன். சாட்சிகளை உடைத்தெறிந்தான். பிரதிவாதி விடுதலையானது அனைவருக்கும் வியப்பு. சித்தாரா வந்தாள். அந்த தாடி வளர்த்த தசரதன் கம்பீரம் கண்டாள். எமது பூமிக்கு கண்ணுள்ள தசரதன் தேவை. குறிஞ்சி மலர் எம்மண்ணில் காணக்கிடைக்காவிட்டாலும் மலையக மாந்தர்கள் அம்மலரில் உயிர் பெற்று காணப்படுகின்றனர்.

தசரதன் வாசு சித்தாரா மூவரும் மாலை மடுசீமை நகரை நோக்கி பயணத்தை ஆரம்பித்தனர்.

அங்கே ஏற்றுமதி தரத்திலான ஓர்கிட் மலர்ச்செய்கையை ஆரம்பிக்க திட்டமிட்டனர். தசரதன் சிறையில் இருக்கும் போது பூச்சட்டிகள் செய்யவும், பூச்செடிகள் வளர்க்கவும் பயிற்சிப் பெற்றிருந்தார். தான் யாருக்கும் பயந்து ஹிந்துகலையிலிருந்து செல்லவில்லை. நீதி, நியாயம் கேட்க, எப்போதும் வருவதாக சூளுரைத்தான்.

..மலர்ச்செண்டு சமர்ப்பணமானது.

---

# வாழ்க்கைச்சோலை - பாகம் -02

## வெளியீடு - 2017 கார்த்திகை

***மாங்கனி.....***

**கனிகளிலே இளவரசி, ஏற்றுமதி வியாபாரத்தில் பானப் பழமாகி**
**வெளிநாட்டுச் சந்தைகளுக்கு பயணமாவாள்**
**பிரியங்கா கீர்த்தனாவுக்கு வழங்கிய ஆலோசனைப்படி**
**வவுனியாவில் ஒரு பழத் தொழிற்சாலையை அமைத்தாள்**
**முத்தையன் கட்டு களஞ்சியத்திலிருந்து மாம்பழங்களும்**
**இதழ்கசின்ன மலையிலிருந்து தேன்குமிழ் பழங்களும்**
**கிரமமாக வந்துகொண்டிருந்தன....**

**தொடரும்...**

## Oh My Dad !

Millions and millions eyes witnessed your excellent poems and marveled. Talking on education Literature and political words for Uva peoples' Journey toward freedom

NITHI NEROSHAN (B.SC (CEY) (R)
Eastern University - Sri Lanka

## நேச தந்தைக்கு... !

இலட்சக்கணக்கான கண்கள் உங்கள் அற்புதமான கவிதைகளை வியந்துள்ளன. கல்வி, இலக்கிய, அரசியல் பேசும் வார்த்தைகள் ஊவா மக்களின் சுதந்திர வழி பயணமாகும்.

நிதி நிரோஷன் (B.Sc (Cey) (R)
விஞ்ஞான பீடம் - கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

வெளியீடு :
தமிழ் பட்டதாரிகள் ஒன்றியம்

Vazhkaisolai Naval
ISBN 978-955-43391-0-1

Iraj Graphics -B/wela